இலங்கையில் செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது. Registered as a Newspaper at the G.P.O

# புதிய கண்ணோட்டம்

PUTHIYA KANNOTTAM

පූදිය කණ්ණොට්ටම්

வெளியீடு: 36 | 01 ஆனி 1997 | விலை: ரூபா 7.00



# முடிவில்லா யுத்தம் தீர்வுக்கு வழிவிடுமா?

**13ந் திகதி அதிகாலை "ஜயசிக்குறூய்" (வெற்றி நிச்சயம்) என்ற பெயரில் தாக்குதல் ஆரம்பமாகிவிட்டது. அவைஅவை போட்ட இடத்தில் அப்படியே இருக்க யுத்தம் மாத்திரம் முனைப்புடன் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது.**

கிளிநொச்சி வரையிலான யாழ் –வவுனியா வீதியைக் கைப்பற்றுவதுதான் இந்த யுத்தத்தின் நோக்கமெனச் சொல்லப்படுகிறது. அடர்ந்த காடுகளுடனான இந்தப்பாதையை கைப்பற்றித் தொடர்ச்சியாக வைத்திருப்பதென்பது மிகக் கடினமான விடயமாகத்தான் இருக்கும்.

ஆனால் 'ரிவிரச', 'சத்ஜெய', 'எடிபல', 'ஜயசிக்குறூய்' என சகல இராணுவ நடவடிக்கைகளும் புலிகளை மூலையில் தள்ளுவனவாய்த்தான் அமைந்துள்ளன.

ஏற்கனவே நடந்த இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களினுள் வாழ்ந்த மக்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களினுள் வந்துகொண்டிருக்கிறார்கள். தற்போதைய நடவடிக்கை, மேலதிகமாக கணிசமான மக்கள் பகுதியினர் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து வெளியேறுவதற்கு வழிவகுக்கும்.

யாழ்ப்பாணத்திலும் சரி வன்னியிலும் சரி, புலிகள், மக்களுக்கான அத்தியாவசியப் பொருள் விநியோகத்தைத்தான் தமது தேவைகளுக்குப் பயன்படுத்தி வந்தார்கள். யாழ் வீதி கைப்பற்றப்பட்டால் விநியோகம் இன்னும் கடினமாகலாம். எனவே பெருந்தொகையானோரைக் கொண்ட படையணிகளை வைத்திருப்பது கஷ்டமாக இருக்கும்.

புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் ஆள் வளமும், மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் குறைந்து செல்வதும் ஒரு பாரதூரமான பிரச்சினையாகும்.

கிழக்கில் புலிகள் கணிசமான அளவில் தமது பலத்தைத் தக்க வைத்திருந்தாலும் பல புதியபகுதிகளை தமது கட்டுப்பாட்டில் கொண்டிருந்தாலும் ஏற்கனவே இருந்தது போல் அத்தியாவசிய பொருள் விநியோகம் இருக்காது. தொலைதூரக் கிராமங்கள் படிப்படியாக வெறிச்சோடி வருவதால் ஆளணிப் பற்றாக்குறை ஒரு பெரிய பிரச்சினையாக உருவெடுக்கலாம்.

'ஜயசிக்குறூய்' இராணுவ நடவடிக்கைக்கு தமது சம்பிரதாய பூர்வமான எதிர்ப்பைக் காட்டுவார்கள். ஆனால் இராணுவம் தனது நடவடிக்கை இலக்கை அடைவதைத் தடுக்க முடியாதென்பதும் அவர்களுக்குத் தெரியும். ஆதலால் வழமைபோல் இராணுவம் உட்கார்ந்தபின் தாக்குதல் தொடுப்பது என்பதே அவர்களின் நோக்கமாக இருக்கும்.

ஆனால் வடக்கின் போர் நிலவரங்களை மொத்தமாக அவதானித்தால், இராணுவம் ஆதிக்க நிலை பெற்றுள்ளதை எளிதாக உணர முடியும். யாழ்ப்பாணம் வன்னிப்பெரு நிலப்பரப்பில் 90 வீதம் புலிகளின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது. இப்போது அது மாறி வருகிறது என்பது உண்மை.

'இராணுவத்தை உள்ளே வர அனுமதித்தபின் படுபயங்கரமான தாக்குதல்களைத் தொடுப்பார்கள்' என எமது இராணுவ ஆய்வாளர்கள் என அழைக்கப்படுவர்களின் கருத்துக்கள் கானல்நீராகவே இருக்கின்றன. அரசின் மிகப் பிரமாண்டமான இராணுவ நடவடிக்கைகளின் பின்னர், ஆரம்ப கால கெரில்லாத் தாக்குதல்களையே புலிகள் நடாத்துகிறார்கள்.

ஆனால் எந்தப் பாரிய இராணுவ நடவடிக்கையோ யுத்தமோ புலிகளை ஒரேயடியாக அழித்துவிட முடியாது என்பதும் தெளிவான உண்மையாகும்.

அரசைப் பொறுத்தவரை, இவ்வளவு பெருந்தொகையான படையினரை எவ்வளவு காலத்திற்குத் தொடர்ந்து வடகிழக்கில் தங்கவைக்க முடியும் என்பது முக்கியமான கேள்வியாகும்.

இந்திய அமைதிகாப்புப் படை இங்கு தங்கியிருந்த காலத்திலேயே, இந்தியாவிற்கு அது பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்படுத்துவதாகவே அமைந்திருந்தது.

ஏறத்தாழ அதே அளவிலான தொகையில் இலங்கைப் படையினர் வடகிழக்கில் உள்ளனர். இந்தியா போன்ற ஒரு பிரமாண்டமான நாட்டுக்கே தாங்க முடியாதென்றால், இலங்கைக்கு தொடர்ச்சியாக இத்தனை படைகளை எவ்வாறு தங்க வைக்க முடியும் என்ற ஒரு பிரச்சினை உண்டு.

கைப்பற்றப்பட்ட பகுதிகளில், வென்றவர்களின் மேலாதிக்க உணர்வு வெளிப்பாடுகள் இல்லாமலில்லை. அதற்குப் பல சான்றுகளும் அன்றாட நிகழ்வுகளில் இருந்தது. (உதாரணம்: பொதுமக்களின் வீடுகளை படைகளின் தேவைகளுக்காக எடுத்துக் கொள்ளுதல், பெண்கள் மீதான ஆதிக்க மனோபாவம்–செயற்பாடுகள், யாழ்ப்பாணம் கைப்பற்றப்பட்டவுடன்"யாப்பாபட்டுன கைப்பற்றப்பட்டதாக ரத்வத்தை சந்திரிகாவிடம் ஓலை வழங்கியது, பறையனாலங்குளத்திற்கு சப்புமல்புர எனப் பெயர் சூட்டப்பட்டது.)

இவைஎல்லாம் தற்செயலாகவா நடைபெற்றன? 'சப்புமல்' இலங்கை முழுவதையும்கைப்பற்றி தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்தான் என்றொரு கதையுண்டு. அவன் சிங்கள மன்னன் என சிங்களஇனவாதிகள் கூறுவார்கள். எனவே சப்புமலின் வாரிசுகளாக, சிங்கள மக்களின் விடுதலைக்காக போராடுபவர்களாக இங்கு சிலர் தம்மைக் காட்டிக்கொள்ள முனைகிறார்கள்.

எனவே இந்த யுத்தவாதிகளின் முன்னால் இனங்களின் சமத்துவம் ஐக்கியம் என்பனவெல்லாம் அர்த்தமற்றவை. இவர்கள் தாம் இன்னொரு இனத்தின் மீது வெற்றிவாகை சூடிய வெற்றியாளர்கள் எனத் தம்மைக் காட்டிக் கொள்ள முனைகிறார்கள்.

இந்த யுத்தம், அந்த மமதை இறுமாப்புடன் தான் நடத்தப்படுமானால், தமிழ் மக்களை அதற்கு ஒருபோதும் அடிபணியச் செய்துவிட முடியாது.

அடுத்த விடயம், 'சத்ஜெய' இராணுவ நடவடிக்கையின் பின்னர் கிளிநொச்சியில் மக்கள் எவரும் இல்லை.அது முற்றுமுழுதாக இராணுவப் பிரதேசமாகவே காணப்படுகிறது என்பது ஒன்றும் புதிய விடயமில்லை. ஆனால் அங்கு பல நூற்றாண்டுகளாக இருந்ததாகக் கூறப்படும் பௌத்த விகாரை ஒன்றைப் புனரமைத்துள்ளதாக ரூபவாகினியில் செய்தி வெளியாகியது. நாகதீபத்திற்குச் செல்லும் யாத்திரிகர்கள் தங்கிச் செல்லும் இடமாக இந்த விகாரை இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அந்தப் பிரதேசமக்கள் தமது வாழ்விடங்களை விட்டு வெளியேறி நீண்ட காலமாயிற்று. அவர்களின் குடிமனைகள்,பாடசாலைகள், கோவில்கள், தேவாலயங்கள், வைத்திய சாலை, சந்தை, கடை ஆகியவற்றின் நிலைமை என்னவென்றே தெரியாது. ஆனால், விகாரை கட்டி திறந்து வைக்கும் வைபவம் மாத்திரம் இனமத பாகுபாடின்றி நடைபெற்றதாக ரூபவாகினி தெரிவிக்கிறது.

சந்தர்ப்பம் கிடைக்கும்போது பௌத்த சிங்கள மேலாதிக்கவாதத்தை நிலைநிறுத்த முற்படுவது, விதிவிலக்கில்லாமல் சகல ஆட்சியாளர்களிடையேயும் நிலவும் போக்காகும். இத்தகைய ஒரு சூழ்நிலையில் சகல தமிழ்த் தரப்பினருமே தீவிரமாக சிந்திப்பதும் எச்சரிக்கையாக நடப்பதும் அவசியமாகும்.

யாழ் வீதியைக் கைப்பற்றுவதற்கான சண்டை இலக்குகளை அரச படைகள் அடைந்துவிடலாம்..... ஆனால், மக்களின் அவலங்களுக்கு விடிவு கிட்டுமா என்பதனை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். ஏற்கனவே பல்வேறு விதமான துன்பங்களையும் அனுபவித்துக் கொண்டு மக்களில் ஒருபகுதியினர் வவுனியாவில் வாழ்கிறார்கள்.

தற்போது யாழ் வீதிக்கு அண்மையில் வாழ்ந்த மக்கள் எங்கே போகிறோம் எனத் தெரியாமல் நாலாபக்கமும் சிதறி ஓடிக்கொண்டிருக்கிறார்கள்.

பீரங்கிச் ஷெல்கள் மல்லாவி வரை சென்று விழுவதாக அறிய முடிகிறது. புளியங்குளத்தில் ஒரு பெண் உட்பட மூன்று பேர் இறந்ததாகவும், நெடுங்கேணியில் மூன்று குழந்தைகள் விமானக் குண்டுவீச்சில் இறந்ததாகவும் யுத்தத் தொடக்கத்திலேயே அறிய முடிந்தது.

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

# கண்ணோட்டம்

## தமிழ்க் கட்சிகளின் அரசியல் முதிர்ச்சி?

பாராளுமன்றத் தெரிவுக்குழு, பாராளுமன்றத்தில் இருக்கும் முஸ்லீம், தமிழ் கட்சிகளும், ஐக்கிய தேசியக் கட்சியும் பேச்சு வார்த்தை.... ரணில்–சந்திரிகா உடன்பாடு.... என பல அரசியல் நகர்வுகள் தீர்வை நோக்கிய பாதையில் நடைபெறுவதாகத் தென்பட்டாலும் கூட, இவை மீது நம்பிக்கையற்ற தன்மையே மக்கள் மத்தியில் உள்ளது. தெரிவுக்குழுவானது வருடக்கணக்கில் இழுபடுகின்றது, அத்துடன் பிரதான விடயங்கள் இது வரை பேச்சுவார்த்தைக்கே எடுக்கப்படவில்லை.

இதைப்போலவே ஐக்கிய தேசியக் கட்சியுடனான தமிழ், முஸ்லீம் கட்சிகளின் பேச்சுவார்த்தைகளிலும் அக்கட்சிகளுக்கே நம்பிக்கையில்லை. ஆனால் அதேசமயம் தீர்வுத் திட்டம் பேச்சுவார்த்தை என்பவற்றுக்கு அப்பால் அரசாங்கம் தனது இராணுவ நடவடிக்கைகளில் உறுதியாக உள்ளது. அரசு தொடங்கியுள்ள வவுனியா முதல் கிளிநொச்சி வரையிலான பாதை திறப்பு நடவடிக்கை என்பது யாழ்ப்பாணத்திற்கான போக்குவரத்தை இலகுபடுத்தும், மக்களின் ஏழு வருடக் கஷ்டங்கள் குறையும், புலிகள் அரசியல் இராணுவ ரீதியாகப் பலவீனப்படுவார்கள் என்னும் அதேசமயம், பல வீடுகளும் கிராமங்களும் முற்றாக அழிக்கப்படுவதும் தவிர்க்க முடியாமல் போகும்.

வவுனியா–கிளிநொச்சிக்கு இடைப்பட்ட கண்டி வீதியின் இருமருங்கிலும் 300 யாருக்கு மேற்பட்ட பரப்பில் வீடுகள் இருக்கும் என எதிர்பார்க்க முடியாது. அதேபோல் ஏனைய பகுதிகளில் நகரும் இராணுவமும் பல கிராமங்களினூடு செல்வதால், இவையும் அழிக்கப்படும் என்பதே யதார்த்தமானது. இந்நிலையில் பெருந்துன்பத்திற்குள்ளாகப் போவது பொதுமக்களே.


அரசியல் தீர்வு கேள்விக்குறியாக இருந்தாலும் இராணுவ தாக்குதல்கள் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டே வருகின்றன. ஆனால் அரசியல் தீர்வுக்கு அழுத்தத்தை கொடுக்க வேண்டிய தமிழ் கட்சிகள் குறுகிய நலன்களின் அடிப்படையில் ஏனைய தமிழ்கட்சிகளுடன் பகைமை பாராட்டிய வண்ணமே உள்ளன. இந்த இறுதி நேரத்திலாவது நாம் ஒன்றுபட்டு குரல் கொடுக்க வேண்டும் என்ற அடிப்படைச் சிந்தனை கூட அற்றுப்போய் நிற்பதானது தமிழ் இனத்தின் தலைவிதி இப்படிப் போய் விட்டதா என்ற எண்ணத்தையே உருவாக்குகின்றது.

தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து தமிழ் இனத்தை உணர்ச்சியூட்டிய தமிழர் விடுதலைக் கூட்டணி, ஏனைய தமிழ் கட்சிகளுடன் பேசினாலே தீட்டு என்ற நிலைப்பாட்டிலேயே உள்ளார்கள். பாராளுமன்ற ஜனநாயகம், சாத்வீகப் போராட்டம் என்பவற்றில் பாண்டித்தியம் பெற்றவர்கள், அரசாங்கத்துக்கு ஓர் அழுத்தத்தை கொடுக்க கூட முற்படாமல் இருப்பது அவர்களின் அரசியல் செயற்பாட்டின் மேலேயே கேள்வி எழுப்புகின்றது.


ஈ.பி.டி.பி.–9, த.வி.கூ.–5, புளொட்–3 என வடகிழக்கில் 17 ஆசனங்களை இவர்கள் தம் கைவசம் வைத்துள்ளார்கள். இன்றைய சூழ்நிலையில் தீர்வு தொடர்பாக ஓர் பொது முடிவுக்கு வந்து இவர்களால் வேலை செய்ய முடியுமெனில், நிச்சயமாக தீர்வினை எட்ட ஓர் காத்திரமான பங்களிப்பை இவர்களால் செய்ய முடியும். ஆனால் இவர்களுக்கு கட்சி நலன்களே முக்கியமாக உள்ளது. தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு ஏனையோருடன் பேசுவதே தீட்டு எனில், ஈ.பி.டி.பி.க்கு தீர்வுத்திட்டம் எக்கேடுகெட்டுப் போனாலும் பரவாயில்லை இடைக்காலத்தில் வடகிழக்கிற்கு தான் தலைவராகிவிட வேண்டும் என்ற அவா. தெரிவுக்குழுவில் பிரத்தியேக உரிமைகள் வேண்டும் என அறிக்கை சமர்ப்பித்த இவர், தான் முன்வைத்த எந்தத் திருத்தம் தொடர்பாகவும் இதுவரை பேசியது கிடையாது.

இதனைப் போன்றே ஏனைய சில தமிழ் கட்சிகளும் கூட ஒற்றுமையின் அவசியத்தைப் பற்றிப் பேசினாலும், நடைமுறையில் அவற்றுக்கெதிராகவே செயற்படுகின்றார்கள். இவர்களின் பேச்சுக்கும் நடைமுறைக்கும் எந்தவித சம்பந்தமும் இருப்பதில்லை. இப்படியான சூழ்நிலையானது தமிழ் மக்களின் முழுப் போராட்டத்தையுமே கொச்சைப்படுத்துவதாகும்.

தமிழ் கட்சிகள் ஒன்றுபடும் பட்சத்தில் தீர்விற்கான அழுத்தத்தை உருவாக்க முடியும். ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணி உட்பட ஜனநாயகப் பாதைக்கு வந்ததாக கூறிக் கொள்வோருக்கம் இன்னும் அரசியல் முதிர்ச்சி ஏற்படவில்லை என்றே தோன்றுகின்றது.



மலையக மக்கள் முன்னணியின் உபதலைவரும் மத்திய மாகாண சபை உறுப்பினருமான வி.டி.தர்மலிங்கம் அவர்களது மறைவு குறித்து ஈ.பி.ஆர்.எல்.எஃப். தனது அஞ்சலியைச் செலுத்துகின்றது.





28.04.97 அன்று வவுனியா செட்டிக்குளம் துட்டுலாகை கிராமத்தின் சனசமூக நிலையத்திற்கு நூல்களையும் தளபாடங்களையும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினர் அன்பளிப்பாக வழங்கினர். அங்குள்ள சிறுவர் பாடசாலையில் குழந்தைகளுக்கு அப்பியாசப் புத்தகங்கள், பாடப் புத்தகங்கள் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சிகளில் ஈ.பி.ஆர்.எல்.எப். இன் மத்திய குழு உறுப்பினர் தி.ஸ்ரீதரன், வவுனியா மாவட்டச் செயலாளர் சிவசக்தி ஆனந்தன், கிரராம அபிவிருத்திச் சபைத் தலைவர், செட்டிக்குளம் பிரதேசசபை செயலாளர் செல்வி துரைச்சாமி, வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் வவுனியா மாவட்ட உப முகாமையாளர், நேரியகுளம் – துட்டுலாகை கிராமசேவையாளர் ஆகியோர் பங்குபற்றி உரையாற்றினர். பெருமளவு துட்டுலாகை கிராம மக்களும், ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்களும் இந் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர்.

சில வாரங்களுக்கு முன்னர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பினரும், கிராம மக்களும் இப்பகுதியில் சிரமதான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். ●

### இன்னுமிங்கு மனிதர்கள்...

இன்னுமிங்கு
மனிதர்கள் இருந்துகொண்டுதான்....
மனிதர்கள் ஓடிக்கொண்டும்....
இறந்தவர்
இறப்பவர் போக
இருந்து நடந்து ஓடி
பசியை
படுக்கையை துறந்து
இன்னுமிங்கு....

எங்கள் துயரை–
எங்களைத் தொட்டுப் பார்த்து வரும்
காற்றிடம் மேகக்கூட்டங்களிடம் கேளுங்கள்
எம்மவர் குருதியில்
புல்பூண்டுகளும் மரஞ்செடி கொடிகளும்
செழிப்பாய்....
எம்மவர் தசைகளில்
ஈக்களும் கொசுக்களும்
காக்கைகளும் பிராந்துகளும்
பூச்சி புழுக்களும் இன்னும் இதரவும்
களிப்புடன்....

இன்னுமிங்கு
மனிதர்கள்....

என் மகன் என் மகள்
என் அம்மா என் அப்பா
என் அக்கா அண்ணா
என் தங்கை தம்பி
எம் தேசத்திலும் எங்கெங்கோவும்
ஊருக்கொன்றாய்
அகதிகளாய் அநாதைகளாய்
எங்கள் துயரை
காற்றிடம் மேகக் கூட்டங்களிடம்....

வீடு வாசல் முற்றம்
அடுப்படி கிணத்தடி
விளக்குமாறு பாய் தலையணை
உரல் உலக்கை அம்மி குழவி
தோட்டம் துரவு
எதுவும் எம்மிடமில்லை

ஆனால்....
இன்னுமிங்கு
மனிதர்கள் இருந்துகொண்டு....
இருப்புக்காய்
மனிதர்கள் ஓடிக்கொண்டும்....

– எஸ். லெனின்
திருகோணமலை.

### தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

உங்களிடமிருந்து அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் புதிய கண்ணோட்டம் வரவேற்கிறது. அனுப்ப வேண்டிய முகவரி:

புதிய கண்ணோட்டம்
த.பெ.இல: 442
கொழும்பு

புதிய கண்ணோட்டம் தொடர்பான அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:

29A, வாவிக்கரை வீதி-1,
மட்டக்களப்பு.
☎ 065-2398

54, மாணிக்கவாசகர் வீதி,
திருகோணமலை.
☎ 026-22858

22, வெளிவட்ட வீதி,
வவுனியா.
☎ 024-22724

மன்னார்.
☎ 023-2370

Post Bag: 1041, Madras-17, India.

B.M.Box: 1738, London-WCIX-3NN, U.K.

E.P.I.C., Box No: 95, 95144, GargesLes, Gonnesse Cedex, France.

P.Fach: 100206, 44002 Dortmund, Germany.

P.Fach: 506, Bern-17, Switzerland.

# புலிப் பயங்கர வாதத்தைக் காட்டி, தீர்வு பின்தள்ளப்படும் போக்கை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்

அன்பிற்கினிய தமிழ் மக்களுக்கு,

தமிழ் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மிக நீண்ட நாட்களின் பின் ஓர் புதிய முயற்சி ஆரம்பிக்கப் பட்டுள்ளதாகத் தோன்றுகின்றது.

பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் ஐக்கிய தேசியக் கட்சியும், ஆளும் கட்சியும் எதிரும்புதிருமான நிலைகள் எடுக்கத் தொடங்கியவுடனேயே, ஈ.பி.ஆர்.எல்.எப். உள்ளிட்ட ஐந்து தமிழ் கட்சிகள் கொழும்பில் இருக்கும் சகல தூதுவராலயங்களிற்கும் சென்று, 'சிறீலங்கா அரசால் இதனைத் தனித்து தீர்க்க முடியாது, ஏனெனில் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஆளுங்கட்சிக்குமிடையில் எந்தவிதமான ஒத்துழைப்பும் கிடையாது, தெரிவுக் குழுவில் இது நிறைவேறுவது கஷ்டம்....

அதுமாத்திரமல்லாமல், புலிகளோ அன்றி அரசோ உண்மையான – நேர்மையான பேச்சுவார்த்தையில் ஈடுபடுவார்களா என்பது சந்தேகமானது, எனவே இவர்கள் எல்லோரையும் ஒருமித்த ஓர் வழிக்கு கொண்டு வருவதற்கு ஓர் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் முக்கியமானது' என்பதை வலியுறுத்தினோம்.

இந்தியா, பிரித்தானியா, அமெரிக்கா, ஃபிரான்ஸ், நோர்வே, இத்தாலி, ஜேர்மனி, அவுஸ்திரேலியா போன்ற பல நாட்டு தூதுவராலயங்களுக்கு இது தொடர்பாக நாம் வலியுறுத்தினோம்.

அதன் பின்னர் மாவீரர் தினச் செய்தியில் புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்களும் 'மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடனான பேச்சுவார்த்தைக்கு நான் தயார்' எனக் கூறினார்.

இதேசமயம் புலிகளை இராணுவரீதியில் பலவீனமாக்க வேண்டும் என்ற செயற்பாட்டில் இலங்கை அரசு திட்டமிட்டுச் செயற்பட்டது. இதன் பிரகாரம் யாழ்குடாநாடு, கிளிநொச்சி நகரம், வவுனியா–மன்னார் நெடும்பாதை போன்றவை இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் வந்தது. இதனால் புலிகளின் பலத்தின் மேல் மக்களுக்கிருந்த நம்பிக்கை கேள்விக்குரியதானது.

புலிகள் தீவிரமாகப் பின்வாங்கி சிறு சிறு தாக்குதல்களை நடாத்தினார்களே அல்லாமல், பெருநிலப் பரப்புக்களை இழந்தே வந்தனர். இதேபோல் வெளிநாடுகளிலும், இவர்களது நிதிசேகரிப்பு குறைந்து வந்ததுடன், மக்களும் இவர்களிடம் கேள்விகள்கேட்க ஆரம்பித்தார்கள்.

இந்த நிலையில் தான் பேச்சுவார்த்தை என்ற ஓர் தேவை புலிகளுக்கு ஏற்பட்டது.

அன்பிற்கினிய தமிழ் மக்களே!

கடந்த காலத்தில் நடந்த பேச்சுவார்த்தைகள் யாவும் புலிகளினால் திட்டமிட்ட வகையில் குழப்பப்பட்டன. ஆனால் பின்னர் அதற்கான பழியை அவர்கள் அரசு மேலேயே சுமத்தி வந்தார்கள். அதேபோல் இப்பொழுது ஏதோ ஒருவகையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பேச்சுவார்த்தைக்கும் இதே கதி ஏற்படாது என்பதற்கு என்ன நிச்சயம்?

உங்களைப் பொறுத்தவரை 'அமைதி வேண்டும், சமாதானம் வேண்டும், கௌரவமான தீர்வு பேண்டும்' என்கின்றீர்கள். புலிகளில் பலருக்கு கூட இதில் நாட்டமிருக்கலாம். ஆனால் புலிகளின் தலைமை இதனை ஏற்றுக்கொள்ளுமா?

ஏனெனில், பிரபாகரன் என்ற தனிநபர், தான் விட்ட தவறுகளுக்குள் மூழ்கிப் போயுள்ளார். தமிழீழத்துக்கு எதிரானவர்கள் என, துரோகிகள் என பல தமிழ்த் தலைவர்களைக் கொலை செய்தார்கள்.

'நீ முன்னால் போ நான் பின்னால் வருகின்றேன்' என உற்சாக மூட்டி திலீபன் தொடக்கம் பல நூறு இளைஞர்களை தற்கொலை புரிய வைத்தார். யுத்தத்தின் மூலம் வெற்றி கண்டு தனிநாட்டை அடைந்து விடலாம் என வறட்டுத்தனமாக நம்பினார்.

இதனால் தனக்கு எதிரி என்று கருதும் சகலரையும் கொலை செய்து குவித்தார். ராஜீவ் காந்தியைக் கூட இவர் விட்டுவைக்கவில்லை.

இச்சூழ்நிலையில், பேச்சுவார்த்தை மூலம் ஓர் தீர்வை ஏற்றுக் கொண்டு இவர் எவ்வாறு ஓர் சமாதானப் பாதைக்கு வரமுடியும்?

தனது படையணி, பாதுகாப்பு ஆகியவற்றை விட்டு இவரால் எந்தக் காலத்திலும் ஜனநாயகப் பாதைக்கு வரமுடியாது. ஏனெனில் அவர் செய்த கொலைகளே அவருக்கெதிராகத் திரும்பும். மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேயென்பது போல எந்தத் தமிழனைப் பார்த்தாலும் இவன் என்னைக் கெல்லத்தான் வந்திருக்கின்றான் என்ற பய உணர்வே மேலோங்கி நிற்கும்.

இந்நிலையில் இவர் எப்படி தீர்வை ஏற்றுக்கொள்ள முடியும்? எவ்வாறு ஜனநாயக வழிமுறைக்கு வரமுடியும்?

இவற்றுக்கு மேலாக தமிழீழத்துக்காகப் பலபேரைப் பலிகொடுத்தவர், அதனை விட்டு வேறொன்றுக்கு வர எப்படி புலி உறுப்பினர்கள் அனுமதிப்பார்கள்? ஆகவே எல்லா வகையாலும் பிரபாகரன் மிகவும் இக்கட்டான சூழலுக்குள்ளேயே மாட்டுப்பட்டுள்ளார்.

தனிநாடு, தவிர்ந்த எந்த ஓர் தீர்வும் பிரபாகரனின் உயிருக்கு உத்தரவாதம் அளிக்காது என்பதை பிரபாகரன் புரிந்துகொண்டுள்ளார். தனிநாட்டில் சர்வாதிகாரியாக இருந்தால் மாத்திரமே அவர் இயற்கை மரணமெய்தும் வரை சீவிக்கலாம்.

ஜனநாயகப் பாதையை ஏற்றுக் கொள்வதானது தனக்கு தானே குழிபறிப்பது போன்றதாகும். ஏனெனில், ஜனநாயகப் பாதையை ஏற்றுக்கொண்டால் எப்போ ஒருநாள் மக்கள் இவரை வீட்டுக்கு அனுப்பி விடுவார்கள். இவரது பாதுகாப்புக்கு உத்தரவாதமிருக்காது.

அப்படி இல்லையேல் அரசியல் அடைக்கலம் தேடி கண்காணாத தேசத்துக்குப் போக வேண்டும். அதற்குப் பிரபாகரன் தயாராக இருக்கின்றாரா?

இவை முடியாவிடில், அவரது இயக்கத்துக்குரிய குணாம்சப்படி அவர் தற்கொலை செய்துகொள்ள வேண்டும். ஹிட்லரும் இறுதியில் இதனைத்தான் செய்தார்.

மக்களின் நலன்களின் அடிப்படையில் இருந்து சிந்தித்து உண்மையான தீர்வுக்கு அவர் செல்வாரேயானால், இவருக்கு மேற்சொன்ன பிரச்சினைகள் எழவே செய்யும். ஏனெனில் அவரின் தவறுகளே இன்று அவரைச் சூழ்ந்து கொண்டுள்ளன.

ஆனால் தனது பாதுகாப்பு, தனது உயிர், தனது வாாழ்க்கை என்ற அடிப்படையில்இருந்து முடிவெடுப்பாரேயானால், பேச்சுவார்த்தை என்பதை ஏதோ ஓர் கட்டத்தில் குழப்பவே செய்வார். அதற்கு ஏதாவது பல காரணங்களை அவர் பின்னர் கூறக்கூடும்.

குறைந்தபட்சம் இன்று இருக்கக்கூடிய அராஜக நிலை தொடர்ந்தாலே அவர் தனது கூட்டத்துடன் பாதுகாப்பாக இருக்கலாம்.

ஆயுதம் எடுத்துப் போராட எவ்வளவு துணிச்சல் வேண்டுமோ, ஜனநாயகப் பாதைக்கு வர அதிலும் விட பலமடங்கு துணிச்சல் வேண்டும். அந்தத் துணிச்சல் பிரபாகரனிடம் இருக்கின்றதா என்பதற்கு காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

அன்பிற்கினிய தமிழ் மக்களே!

உலகத்தில் பல நாடுகளில் விடுதலைப் போராட்டங்கள் நடந்துள்ளன. அதில் பல நாடுகள் விடுதலை பெற்றுள்ளன. இன்னும் பல நாடுகளில் பிரச்சினைகள் தீர்ந்துள்ளன. எதுவாய் இருந்தாலும் கூட இறுதியாக பேச்சுவார்த்தை மூலமே பிரச்சினைகள் தீர்க்கப் பட்டுள்ளன.

இந்தோனேசியாவின் மிந்தனாப் போராட்டம், பால்ஸ்தீனப் போராட்டம், ஆபிரிக்காவில் பல போராட்டங்களை இதில் குறிப்பிடலாம்.

ஆனால் இதில் முக்கியமானது அத்தலைவர்களுக்கு நம்பிக்கையும் ஜனநாயகப் பாதைக்கு வருவதற்கான துணிச்சலும் இருந்தது. ஆனால் அந்தத் தகைமைகள் பிரபாகரனிம் ஒருசில வீதமாவது உள்ளதா என்பதே கேள்விக்குரியது.

அதேசமயம் பிரேமதாசாவுடனோ, சந்திரிகாவுடனோ பேச்சுவார்த்தையை குழப்பியது போன்று, இப்பேச்சுவார்த்தை குழப்பப்பட்டால் பாதிக்கப்படப் போவது புலிகள் இயக்கமே. இதனால் பிரபாகரனின் ஆலோசகர்கள் ஓரளவு ஜாக்கிரதையாகவே செயற்படுவார்கள் என எதிர்பார்க்கலாம்.



ஆனால் பிரித்தானிய மத்தியஸ்தத்துடனோ, அல்லது வேறு எந்த மத்தியஸ்தத்துடனோ பேச்சுவார்த்தை நடந்தாலும், கௌரவமான தீர்வொன்றை எட்டுவதில் தமிழ் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும். புலிகள் பேச்சுவார்த்தையில் பின்வாங்கினாலும் கூட ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் பேசி இனப் பிரச்சினைக்கு தீர்வு காணக்கூடிய வகையிலேயே பேச்சுவார்த்தைகளுக்கான சரியான அணுகுமுறைகள் கையாளப்பட வேண்டும். இல்லையேல் புலியின் பயங்கரவாதத்தைக் காட்டியே தீர்வு பல வருடங்கள் பின்தள்ளப்பட்டுவிடும். ●

**தனிநாடு தவிர்ந்த எந்த ஓர் தீர்வும் பிரபாகரனின் உயிருக்கு உத்தரவாதம் அளிக்காது என்பதை பிரபாகரன் புரிந்து கொண்டுள்ளார். தனிநாட்டில் சர்வாதிகாரியாக இருந்தால் மாத்திரமே அவர் இயற்கை மரணமெய்தும் வரை சீவிக்கலாம்.**



## முடிவில்லா யுத்தம்... (முன்பக்கத் தொடர்ச்சி)

காயமடையும் இராணுவத்தினரைக் கொண்டு சேர்ப்பதற்காக கொழும்பு, அனுராதபுரம், வவுனியாவில் சகல ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன. ஆனால், இறந்து போகும் பொதுமக்களைப் பற்றி யுத்தம் புரிபவர்கள் யாரும் கவலை கொண்டதாகத் தெரியவில்லை. வேண்டுமானால் தமது பிரச்சாரத் தேவைகளுக்காக பொது மக்களின் அழிவைப் பயன்படுத்தலாம் என்றே செயற்படுகிறார்கள்.

யுத்ததர்மம் அப்படித்தானோ என்னவோ....! புலிகள் எவ்வளவு இறந்தார்கள், இராணுவத்தினர் எவ்வளவு பேர் இறந்தார்கள் என்பதிலேயே எல்லோரும் அக்கறையாக இருக்கிறார்கள்.

இதில் இறந்து போனவர்கள் மனிதர்கள்தான் என்பதற்கப்பால், இந்த யுத்தம் நடக்கும் இடத்தில் வசித்தவர்கள் என்ன ஆனார்கள் என்பது பற்றி யாரும் அலட்டிக் கொள்ளவில்லை.

இந்த யுத்தத்தில் அரசு வெற்றி பெற்றால் யாழ் குடாநாட்டிற்கான விநியோகப் பாதை ஓரளவு சிரமமின்றி மேற்கொள்ள முடியும்.

பொதுமக்களின் நாளாந்தப் பயணஅவலங்கள் குறையும்; விலைவாசிகளை கட்டுப்படுத்த முடியும்; நாட்டின் ஒருபகுதியின் தனிமையை நீக்கமுடியும்.


ஆனால் ஒரு இராணுவ சூழலில்–போரின் நிழலிலேயே மக்கள் வாழ்க்கையை நடாத்த வேண்டி ஆகிவிடலாம்.

யுத்த வெற்றிப் போதை வெள்ளத்தில், எல்லோரும் பிய்த்து கந்தலாகிய தீர்வுத் திட்டம் கரைந்து போகலாம். அப்போது யுத்தத்தைத் தவிர வேறு வேலைத்திட்டம் அரசிடம் இல்லாமலே போய்விடலாம்.

எனவே யுத்தம் அதிகரித்துக் கொண்டு போகும் தற்போதைய சூழ்நிலையில், எல்லோரையும் சுயநினைவுக்குக் கொண்டு வருவதற்கு, தமிழ்மக்களின் நலனில் அக்கறையுள்ள மூன்றாவது சக்தியொன்றின் தலையீடு அவசியம். ●

> அரசியல் விடுதலைதான் ஒரு நாட்டின் உயிர் மூச்சு. எல்லாவற்றிலும் முதன்மையாக, அரசியல் விடுதலைக்குக் குறிவைக்காமல், சமூகச் சீர்திருத்தம், கல்விச் சீர்திருத்தம், தொழில் வளர்ச்சி, இனத்தின் நல்லொழுக்கஅபிவிருத்தி ஆகியவற்றை அடைய முயற்சி செய்வது அறியாமையின், வீண்வேலையின் சிகரமே ஆகும்.
>
> - ஸ்ரீ அரவிந்தர்.

# வன்னி: பதட்டத்தின் உச்சியில்



ஏ. சிறீதரன்

வன்னியில் ஒரு யுத்தத்தை எதிர்பார்த்துப் பதட்டம் ஒன்று நிலவுகிறது. வவுனியா-யாழ் வீதியை கைப்பற்றுவதற்கான பெரும் படை நகர்வு எந்தக் கணத்திலும் நடக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

பெருமளவு படையினர் விசேட ரயில்கள் மூலம் வவுனியா வந்துள்ளனர். பெருமளவு தளபாடங்களும் (சமையல், மற்றும் படுக்கை) இறக்கப்பட்டுள்ளன.

இதற்கிடையே அரசின் கட்டுப்பாட்டிலுள்ள நெலுக்குளத்தில் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் பொலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

29.04.97 அன்று வவுனியா 'பஸார்' வீதியிலுள்ள தனியார் தொலைத்தொடர்பு நிலையமொன்றில் வைத்து இராணுவ உளவுத்துறை கீழ்நிலை அதிகாரி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

வன்னியில் பெரும் படைநகர்வு நடவடிக்கைக்கான ஆரவாரங்கள் அதிகரித்திருக்கும் வேளையிலேயே வவுனியா அரச கட்டுப்பாட்டுப் பகுதியினுள் இத்தகைய சம்பவங்கள் நிகழ்கின்றன.

இதற்கிடையே வவுனியா யாழ்ப்பாண வீதியருகே வசித்த மக்கள் அவ்விடங்களை விட்டு இடம்பெயரத் தொடங்கிவிட்டார்கள். ஓமந்தை, கனகராயன்குளம், புளியங்குளம் ஆகிய இடங்களிலிருந்து மக்கள் இடம்பெயரத் தொடங்கி உள்ளார்கள்.

வவுனியாவிலிருந்து 'ஷெல்'களும் ஏவப்படுகின்றன. சில வாரங்களுக்கு முன் 2,3 இடங்களில் வெடித்துச் செல்லும் ஷெல்கள் ஏவப்பட்டன.

மாங்குளம் பகுதியிலுள்ள மக்களை வெளியேறுமாறு ஏற்கனவே புலிகள் கோரியுள்ளார்கள். மாவீரர், போராளிகளின் குடும்பங்களைச் சேர்ந்தவர்களை முல்லைத்தீவுப் பகுதிக்கு அழைத்துச் சென்றதாக அறியமுடிகிறது. ஏனைய மக்களையும் வெளியேறுமாறு கேட்டுள்ளனர்.

இதற்கிடையே வன்னியின் மேற்குப் பக்கமாக உள்ள தமது முகாம்களை கிழக்குப்பக்கமாக (முல்லைத்தீவுப் பகுதிக்கு) மாற்றுவதாகவும் அறிய முடிகிறது. அநாதைப் பிள்ளைகளைப் பராமரிக்கும் 'செஞ்சோலை' போன்ற அமைப்புக்களும் அவ்வாறே இடம்மாற்றப்பட்டுள்ளன.

இதற்கிடையே பெருமளவு மக்கள் தாண்டிக்குளத்தை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள். நாளொன்றுக்கு சராசரியாக 400 பேர் வரை வருகிறார்கள்.

மக்கள் வவுனியா வருவதையோ அல்லது நாச்சிக்குடாவினூடாக யாழ்ப்பாணம் செல்வதையோ புலிகள் பெரிதாகத் தடுக்கவில்லை. ஆனால் அவ்வாறு செல்பவர்களிடம் தமது விண்ணப்பப் படிவத்திற்கான பணம் ரூபா200, வயதுக் கட்டுப்பாட்டுக்குரியவர்களிடம் ரூபா 500 அறவிடுவதை நிறுத்தவில்லை.

தவிர, நாச்சிக்குடாவிலிருந்து யாழ்ப்பாணம் செல்பவர்கள், இந்தியா செல்பவர்களுக்கான அறவிடல்களையும் தொடர்ந்து மேற்கொள்கிறார்கள்.

ஆனால், வவுனியாவினுள் வருபவர்களோ முகாம்களில் தங்க வைக்கப்படுகிறார்கள். 6, 7 மாதங்களாக முகாம்களில் தவமிருப்பவர்களும் இருக்கிறார்கள். இவர்களில் கணிசமான பகுதியினர் கொழும்புக்கும் பிற இடங்களுக்கும் செல்ல வேண்டியவர்களாவர்.

இன்னுமொரு பகுதியினர், கிளிநொச்சிப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள். இவர்களுக்கு போவதற்கு வேறெந்த இடமும் கிடையாது. இவர்கள் தமக்கு நிரந்தர முகாம்கள் அமைத்துத் தருமாறு கோருகிறார்கள்.

வவுனியாவிலுள்ள நிரந்தர முகாம்களான ஆசிகுளம் முகாமும், அடம்பன்குளம் முகாமும் நிரம்பி வழிகின்றன. இதனால் இவர்களைத் தங்கவைப்பதில் பிரச்சினைகள் எதிர்நோக்கப்படுகின்றன.





யாழ்ப்பாணத்திற்குச் செல்பவர்களின் தொகை அதிகரித்துள்ளது. இதுவரை 45 ஆயிரம் பேர் வரை வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணத்திற்குச் சென்றுள்ளனர். கிளிநொச்சியைச் சேர்ந்தவர்களை இராணுவ நடவடிக்கையின் பின்னர் கிளிநொச்சிக்கு அனுப்பக்கூடும் எனத் தெரிகிறது.

இதற்கிடையே, ஏப்ரல் 14ந் திகதியிலிருந்து முகாம்களில் வசிப்பவர்களுக்கான பணக் கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டுவிட்டன. தற்போது உலர்உணவு வழங்கப்படுகின்றது. முகாம்களில் உள்ளவர்கள் உலர்உணவு வழங்கலை ஆட்சேபிக்கிறார்கள். சில முகாம்களில் உலர் உணவை இறக்குவதற்குப் பொதுமக்கள் அனுமதிக்கவில்லை.

ஆசிகுளம், அடம்பன் குளம் போன்ற முகாம்களில் உலர்உணவு வழங்கப்படுவதில் நியாயம் உண்டு.அந்த முகாம்களில் இருப்பவர்கள் நாளாந்தம் வெளியில் சென்று வேலை செய்கிறார்கள்.

ஆனால் 4 மணிநேர பாஸ்அனுமதியுடன் வெளியில் வந்து வேலை செய்ய முடியாது. வழங்கப்படும் உலர் உணவுடன் ஏனைய அத்தியாவசிய் தேவையான பொருட்களைப் பெறுவதானால் அவர்கள் வேலை செய்துதான் ஆகவேண்டும்.

அரிசி, மா, சீனி, பருப்பு போன்ற அத்தியாவசியப் பொருட்களே உலர்உணவு விநியோகத்தில் அடங்குகின்றன. எனவே இது நிரந்தரமாக முகாம்களில் தங்குவதற்கு வந்தவர்களுக்குத்தான் பொருத்தமானது.

ஆனால் பல்வேறுகாரணங்கள், அத்தியாவசியத் தேவைகளுக்காக வவுனியாவிற்குத் தெற்கே செல்பவர்கள் அல்லது வவுனியாவுக்குள் செல்ல வேண்டியவர்கள்...?

நிரந்தரமாகத் தங்க் வந்தவர்களுக்கு நிரந்தர முகாம்கள் ஒதுக்கிக் கொடுக்கப்பட வேண்டும். தற்போது வசிக்கும் முகாம்களில் அவர்களுக்கு சமைப்பதற்கு வசதியில்லை. பாத்திரங்கள் வழங்கப்படுமாயிருந்தாலும் விறகுத் தேவையை பூர்த்தி செய்வது பெரும் பிரச்சினையாக இருக்கும்.

தவிர வவுனியாவினுள்ளும் வவுனியாவிற்குத் தெற்கேயும் வதிவிடம் தேடுவோர்க்கு புதிய நடைமுறைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அது ஒரு தடைதாண்டல் ஓட்டப் போட்டி.

நூற்றுக்கணக்கான பொதுமக்கள் தமது முகாம் அவலங்கள் குறித்து வவுனியாவிலுள்ள ஈ.பி.ஆர்.எல்.எஃப். காரியாலயத்தில் முறையிட்ட வண்ணம் உள்ளனர்.

நீண்டகால தடுத்துவைப்பு,,, கொடுப்பனவுப் பணம் நிறுத்தப்பட்டது,,, முகாம்களின் சுகாதாரப் பிரச்சினை,,, பாஸ் எடுத்து நாளாந்த அத்தியாவசிய தேவைகளுக்குச் செல்வதிலுள்ள கெடுபிடிகள் ஆகியவற்றால் அவர்கள் விரக்தியின் எல்லைக்கே சென்றுள்ளார்கள்.

குழந்தையை வைத்தியசாலையில் அனுமதித்துவிட்டு, அதற்குத் துணையாக நிற்கமுடியாத நிலை,,, அனுமதிக்கப்பட்ட கால அவகாசத்திற்குள் திரும்பி வராவிட்டால் அதற்குக் கண்மூடித்தனமான தண்டனை.

இவ்வாறு குழந்தையை வைத்தியசாலையில் அனுமதித்துவிட்டு நேரம் தவறி வந்ததற்காக வவுனியா மகாவித்தியாலயம் முகாமில் ஒரு தந்தை காதால் இரத்தம் வருமளவிற்கு முகாம் பொறுப்பதிகாரியால் தாக்கப்பட்டார்.

தவிர, 'எடிபல' இராணுவ நடவடிக்கையின் பின்னர் மன்னார் வீதி அரசின் கட்டுப்பாட்டினுள் வந்துள்ளது தெரிந்ததே. ஆனால் மன்னாரிலிருந்து வவுனியாவிற்கான பயணம் சோதனை மிகுந்ததாகவே காணப்படுகிறது.

மன்னாரிலிருந்து ஒருவர் பயணம் செய்வதானால் ஒரே மாதிரியான 7 விண்ணப்பப்படிவங்களை நிரப்பியாக வேண்டும்.

(தொடர்ச்சி 9ம் பக்கம்)



'சத்திஜய' நடவடிக்கையில் சிதையுண்ட வீடு. இடிபாடுகளைக் கிளறுவது பாட்டி. சிரிக்கும் குழந்தை பேத்தி. இந்தக் குழந்தை பூந்தோட்டம் அகதி முகாமில் சில தினங்களுக்கு முன் மரணித்து விட்டது. தற்போது பாட்டியும் சில உறவினர்களும் மகாவித்தியாலயம் அகதி முகாமில் இருக்கிறார்கள்.



# யுத்தத்தின் இருள் மூடிய வடபகுதிக் கடலோரம்

- விதுரன்

இலங்கையைப் பொறுத்தவரை மீன்பிடித்துறை நல்ல வருவாயைத் தருகின்ற ஒரு துறையாக இருந்தபோதும் அபிவிருத்தி இன்றிக் காணப்படுகிறது. நாட்டின் இதர பகுதிகளுடன் ஒப்பிடும்போது வடக்கு கிழக்கு மிக மிகப் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. யுத்தத்தின் காரணமாக வடக்கு கிழக்கில் ஏனைய துறைகளைப் போலவே மீன்பிடித் துறையும் நலிவடைந்து போயுள்ளது.

இலங்கையின் மொத்த கரையோர நீளம் 1920 கிலோ மீற்றர் ஆகும். இதில் வடபகுதி 806 கிலோ மீற்றர் நீளத்தினை கொண்டதாகும். கடற்றொழில் அமைச்சின் 1990 ஆம் ஆண்டு அறிக்கையில் வடபகுதியின் மொத்த மீனவர்கள் 143,664 என தெரிவிக்கப்பட்டுள்ளது. இது நாட்டின் மொத்த மீனவர்களில் 35 சதவீதமாகும்.

1983ஆம் அண்டு முழு நாட்டினதும் உற்பத்தியில் 41 வீதம் வடபகுதியில் கிடைத்தது. ஆனால் இன்று உற்பத்தியின் அளவு 20 சதவீதத்திற்கும் குறைவாகவே உள்ளதாக மதிப்பிடப்படுகிறது.

## வடபகுதி மீனவர்க்கு வசதி வாய்ப்பில்லை

யுத்தத்தின் காரணமாக வடபகுதியில் மீனவர் குடியிருப்புகள், படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் என்பன முழுமையாகஅல்லது பகுதியாக சேதமடைந்துள்ளன. மீனவர்களின் வாழ்க்கை மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது.

> யுத்த அபாயமற்ற ஒரு சூழலில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகள் மூலமே நாம் முழுமையான பயனை எய்த முடியும்.

நவீன உபகரணங்களும் தொழில் நுட்பங்களும் இன்று அனைத்து துறைகளிலும் பாரிய மாறுதல்களை ஏற்படுத்திவருகிறது. ஏனைய துறைகளைப் போலவே மீன்பிடித் துறையிலும் நவீன சாதனங்களும் நவீன தொழில் நுட்பமும் பாரிய முன்னேற்றத்தினை ஏற்படுத்தியிருக்கிறது.

இன்று நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள மீனவர்களுக்குக் கிடைக்கும் இந்த வசதி வாய்ப்புகள் தமிழ்ப் பிரதேசங்களுக்குக் கிட்டவில்லை. நவீன சாதனங்களும் தொழில் நுட்பமும் பயன்படுத்தப்பட முடியாமல் போனது மட்டுமல்ல, பண்டைக்கால முறையில் கூட யாழ் குடாநாட்டில் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ள முடியாத நிலையில் மீனவர்கள் உள்ளார்கள்.

இங்கு வெளிஇணைப்பு இயந்திரங்கள் பயன்படுத்த முடியாது. சில இடங்களில் நடந்து சென்றே தொழில் செய்யவேண்டும். மீன்கள் கெட்டுப்போகாமல் பாதுகாப்பதற்கு ஐஸ் அல்லது குளிரூட்டி வசதி என்பனவும் இல்லை.

குறிப்பிட்ட காலத்தில் பெருமளவில் பிடிபடும் இறால்களை கொழும்புக்கு அனுப்ப வசதி இல்லாமையால் மீனவர்கள் மிகக் குறைந்த விலைக்கு அவற்றை உள்ளூரிலேயே விற்பனை செய்ய வேண்டியுள்ளது.

## கசப்புணர்வுகளுக்கான காரணங்களை காண்க

யாழ் குடாநாட்டில் சாதாரண மீன்பிடி வகைகள் கூட கிடைப்பதில்லை. இவற்றைப் பெற்றுக்கொள்ள மீனவர்கள் படும்பாடு பெரும்பாடாய் உள்ளது. வலைகளை கொழும்பிலிருந்து கொண்டுவருவதற்கு மீன்பிடி சங்கங்கள் அனுமதி கோரியபோதும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைக்கவில்லை.

அதேவேளை தனியார் வர்த்தகர்கள் எப்படியோ அனுமதிபெற்று கொழும்பிலிருந்து வலைகளை கொண்டுவந்துள்ளனர். இவற்றை 6 மடங்கு அதிகரித்த விலைக்கு மீனவர்களுக்கு விற்பனை செய்துள்ளனர் என மனம்நொந்து கூறுகிறார் மீன்பிடிச் சங்கத் தலைவர் ஒருவர்.

வலைகளை உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலை ஒன்றும் தொழிலாளர்களும் உள்ள போதும் அதனை இயங்க வைப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்படவில்லை.

இத்தகைய ஒரு நிலை நீடிப்பதும் இதனை இன ரீதியான பாகுபாடு என இனங்காண்பதும் படித்தவர்கள் விபரமறிந்தவர்கள் மத்தியிலும் காணப்படுகிறது.

எனவே, இனங்களுக்கிடையே கசப்புணர்வுகளைப் போக்கி, நல்இணக்கத்தை ஏற்படுத்தி பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முயற்சிப்பவர்கள், கசப்புணர்வுகள் தோன்றுவதற்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றுக்குத் தீர்வுகாண முயற்சிப்பதும் அவசியம்.

## மீன் தருவதல்ல மீன்பிடிக்க வகை செய்

யாழ் மாவட்டத்தில் காங்கேசன்துறை, பலாலி, மயிலிட்டி போன்ற இடங்களிலிருந்து மீனவர்கள் முற்றாக இடம்பெயர்ந்துள்ளனர். இன்னும் அவர்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பமுடியாத நிலையில் உள்ளனர்.

இவ்வாறு தொழில் செய்ய முடியாமல் பாதிப்புற்றிருக்கும் மீனவர்கள்அரசாங்கம் வழங்கிவரும் நிவாரணத்தினையே பெரிதும் நம்பியுள்ளனர். இந்த நிவாரணக் கொடுப்பனவுகளில் ஏற்படும் தடங்கலும் தாமதமும் அவர்களை வெகுவாக பாதித்துள்ளது.

தொழில் செய்ய முடியாமல் பாதிப்பு அடைந்திருக்கும் இந்த மீனவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படுவது அவசியம். ஆனால் அதுவே அவர்களின் பிரச்சினைகளுக்கு நிரத்தரத் தீர்வாக ஆகிவிடாது என்பதும் மனங்கொள்ளப்படல் வேண்டும்.

"மீனை கொடுக்காதே, மீன் பிடிக்கக் கற்றுக்கொடு" என ஒரு சீன முதுமொழி உண்டு. மீனைக் கொடுத்து உழைக்காமல் சாப்பிடும் சோம்பேறியாக மனிதனை மாற்றி விடக்கூடாது. மீன்பிடிக்கக் கற்றுக் கொடுத்து, அவன் உழைத்துச் சாப்பிட வழிசெய்ய வேண்டும் என்பது இதன் பொருள்.

இங்கு மீன்பிடிக்கக் கற்றுக் கொண்ட மீனவர்கள் உழைத்துச் சாப்பிட வழியில்லை. அவர்களும் நிவாரணத்திற்குக் காத்திருக்கும் நிலை தோன்றியுள்ளது. இது முழு சமூகத்திற்கும் கேடு விளைவிப்பதாகும்.

## கட்டுப்பாடுகளின் காரணங்கள் அறிவர்

மீனவர்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பி, மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேனும் மீன்பிடியை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட வேண்டும். தமது படகு மற்றும் மீன்பிடி உபகரணங்களை இழந்து போயிருக்கும் இந்த மீனவர்கள் தங்கள் தொழிலைத் தொடங்குவதற்கான உதவிகள் வழங்கப்படுவது இன்றியமையாதது.

கடலில் மீன்பிடிப்பதற்கு விதிக்கப்பட்டுள்ள தடை அல்லது கட்டுப்பாடுகள் மீனவர்களுக்கு மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தியபோதும் இவ்வாறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளமைக்கான காரணங்களை அவர்கள் விளங்கிக் கொள்ளாமல் இல்லை. "மீனவர்கள் போன்றே புலிகளும் வருவினம்... அது எல்லோருக்கும் பிரச்சினை..." என்று அவர்கள் வெளிப்படையாக கூறுகின்றனர். அதனால் ஒதுங்கி நின்று கொள்வது தங்களுக்கும் பாதுகாப்பு என்றே பெரும்பாலான மீனவர்கள் கருதுகின்றனர்.

ஆனால் மீன்பிடிப்பதற்கு ஒதுக்கப்பட்டுள்ள கடற்பரப்பு, நேரம் என்பன இடத்துக்கிடம் மாறுபடுவதாகவும் பாதுகாப்புக்குக் குந்தகமில்லாமல் இதனைச் சீர்செய்ய வேண்டும் என்பதே தற்போது அவர்களது கோரிக்கையும் எதிர்பார்ப்புமாகும்.

## ஆளுக்கொரு நேரம் ஆள்பவர் விதித்தார்

யாழ்ப்பாணம், சாவற்காடு, நாவாந்துறைப் பகுதியில் அதிகாலை 3.30–4.00மணிக்கு தொழிலுக்காக மீனவர்கள் கடலுக்கு செல்ல அனுமதிக்கப்படுகின்ற அதேவேளை, இந்த இடங்களுக்குச் சமீபமாக உள்ள கொட்டடியில் உள்ள மீனவர்கள் காலை 6.00 மணிக்குப் பின்ன்ரே தொழிலுக்கு செல்ல முடிகிறது.

கொழும்புத்துறை, பாஷையூர் பகுதிகளில் மீனவர்கள் மூன்று கி.மீ. தூரம் கடலுக்குச் சென்று தொழில் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ள அதேவேளை நாவற்குழியில் 300 மீற்றர் தான் கடலுக்குள் செல்ல அனுமதிக்கப்படுகிறது.

கடலுக்குள் 300 மீற்றர்தான் போகமுடியும் என்றாலும் பரவாயில்லை. அனுமதி வழங்கப்பட்டுள்ள ஒருமைல் நீள கரைப்பகுதியை இரண்டு மைல்களாக அதிகரிக்க முடிந்தால் எல்லா மீனவர்களும் நெருக்குப்படாமல் தொழில் செய்யலாம்; வருமானத்தை சிறிது அதிகரிக்கவும் வழிவகுக்கவும் என்பது அப்பகுதி மீனவர்களின் கருத்து.

கொட்டடியில் மீனவர்கள் காலை 6 மணிக்கு கடலுக்கு சென்று மாலை 6 மணிக்குத் திரும்ப அனுமதிக்கப்பட்டுள்ள அதேவேளை சாவகச்சேரியில் உள்ள மீனவர்கள் காலை 6 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரையுமே தொழில் செய்யலாம். நாவற்குழியில் உள்ள மீனவர்கள் காலை 7 மணிக்குதான் கடலுக்கு செல்ல முடியும்.

அதிகாலையில் கடலுக்கு செல்லவேண்டிய நாங்கள் தாமதமாக காலையில் 6 மணிக்கு 7 மணிக்கு போகவேண்டியிருப்பதால், அகப்பட்டதில் ஒருபகுதியை பறவைகள் கொண்டுபோய் விடுகின்றன; இறால்கள் சேற்றில் புதைந்து விடுகின்றன என்பது மீனவர்கள் சிலரின் கவலை.

காலை 7 மணிக்கு போய் 11 மணிக்கு திரும்பி வந்தால் எமது மீன்களை வாங்க சந்தையில் ஆட்கள் இருக்க மாட்டார்கள், விலை வீழ்ச்சி அடைந்து விடுகிறது, எமது சந்தை வாய்ப்பு பாதிக்கப்படுகிறது என குறைப்படுகிறார்கள் இன்னும் சிலர்.

## மாற்றம் வருமா? துயர் விலகுமா?

மீன்பிடித் தொழில், நீரோட்டம் காலநிலை என்பவற்றிற்கு ஏற்ப தொழில் செய்யும் இடமும் வேறுபடுவது இயற்கை. இதனால் மீன்பிடிக்காக ஒதுக்கப்படும் இடங்கள் மீன்பிடிக்கு ஏற்ற இடங்களாக இல்லாமல் போவதும் மீன்பிடிப்பதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ள இடங்கள் நல்ல பிடிபாடுள்ள. இடங்களாயிருப்பதையும் மீனவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

பாதுகாப்புக் காரணங்களை முன்வைத்து மீன்பிடிக்கும் இடம், நேரம் என்பவற்றை அவ்வப்பகுதி இராணுவ அதிகாரிகளே தீர்மானிப்பவர்களாக உள்ளனர். அவர்களே கட்டுப்பாடுகளையும் ஏற்படுத்தியுள்ளனர்.

தற்போது குடாநாட்டில் இயங்கிவரும் மீனவர் சங்கங்களின் வேண்டுகோள்களை செவிமடுத்து, கடலில் மீன்பிடிப்பதற்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளில் மாற்றம் கொண்டுவர இராணுவ அதிகாரிகள் தயாராயிருப்பின் மீனவர்களின் அவல வாழ்வில் மாற்றம் வரும், துயர் விலகும்.

## அடுத்தவன் சோற்றில் கைவைக்காதிருக்க....

இராணுவத்தினரிடம், மீன்பிடிக்கச் செல்வதற்கு அனுமதி பெற்ற

> முன்னெப்போதும் இல்லாதவாறு சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஊடாக இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான முனைப்புக்கள், வாய்ப்புக்கள் உள்ள இன்றைய நிலையில் இதனை விரைவுபடுத்துவதற்கு, ஒவ்வொரு பொதுமகனும் இதற்காகப் பங்காற்ற முன்வர வேண்டும்.

சிலர் வன்னிப்பகுதிக்கு எடுத்துச் செல்ல தடைவிதிக்கப்பட்டுள்ள பற்றரி, தின்னர் மற்றும் உதிரிப்பாகங்களை கடல் வழியாக எடுத்துச் செல்வதும் நடவாமல்இல்லை. ஒரே நாளில் அதிக லாபம் சம்பாதிப்பதே அவர்களின் நோக்கம்.

குருநகரிலிருந்து கல்முனைக்கும் சாவகச்சேரி மறவன்புலவிலிருந்து பெருநிலப்பரப்புக்கும் இவ்வாறு சென்ற சிலர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டும் உள்ளனர்.

"சாவகச்சேரியிலிருந்து கடலின் ஆழம் குறைந்த பகுதிகள் ஊடாக பெருநிலப்பரப்புக்கு நடந்து போக எங்களால் முடியும். அவ்வாறு தடைசெய்யப்பட்ட பொருட்களைக் கொண்டு போனால், இன்று பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் மீன்பிடித் தொழிலில் சம்பாதிப்பதைவிட பலமடங்கை ஒரே நாளில் சுலபமாக சம்பாதிக்கலாம்.

ஆனால் இது சக மீனவர்கள் கடலுக்கு செல்வதற்கு இடையூறாக முடியும்; அவர்களின் சோற்றில் மண் போடுவதற்கு சமம். எனவே அவ்வாறான செயலில் நாம் ஈடுபடுவதில்லை, ஈடுபடமாட்டோம்"என உறுதிபடக் கூறினார் அப்பகுதி மீனவர் சங்கம் ஒன்றின் நிர்வாகிகளில் ஒருவர்.

குடாநாட்டில் இயங்கிவரும் மீன்பிடி சங்கங்கள் இதுபோன்ற தொரு கடப்பாட்டுடன் செயற்படுவார்களேயானால், இன்று மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பது சிக்கல் நிறைந்ததாயிராது என்றே தோன்றுகிறது.

## அபிவிருத்தி முழுமை யுத்தமற்ற சூழலில்

எது எப்படி இருந்தபோதும் மீனவர்கள் தமது ஜீவனோபாயத்திற்காக தொழில் செய்வதற்கு ஏற்ற வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டியது அவசியம். வன்னிப் பகுதிக்கு இடம்பெயர்ந்து சென்ற மீனவர்களும் பெருமளவில் குடாநாட்டிற்குத் திரும்பி வந்து கொண்டிருப்பதனால் மீன்பிடிப்பதற்கான இடம் விஸ்தரிக்கப்பட வேண்டியதும் அவசியம். இதுபற்றிய மீனவர்களின் வேண்டுகோள்கள் கவனத்தில் எடுக்கப்பட்டாக வேண்டும்.

யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்வரை முழுமையான அபிவிருத்தி, தன்னிறைவு சாத்தியம் இல்லை; சாத்தியமாகாதுஎன்பது எமது கடந்தகால அனுபவமுமாகும்.

இந்திய–இலங்கை ஒப்பந்தத்தின் பின் புனரமைக்கப்பட்ட ரயில் பாதைகள், போக்குவரத்து வசதிகள், மின்விநியோகம் மற்றும் அபிவிருத்திப்பணிகள் என்பன இன்று என்ன நிலையில் உள்ளன என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். யுத்த அபாயமற்ற ஒரு சூழலில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகள் மூலமே நாம் முழுமையான பயனை எய்த முடியும்.

## பொதுமக்களின் பங்கு பொறுப்பாக நடத்தல்

எனவே நாம் அபிவிருத்திப்பணிகளுக்கு முக்கியத்துவம் வழங்குவதற்குப் பதிலாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முன்னுரிமையளிப்பதே சிறந்த பெறுபேறுகளைத் தரும்.

முன்னெப்போதும் இல்லாதவாறு சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஊடாக இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கான முனைப்புக்கள், வாய்ப்புக்கள்உள்ள இன்றைய நிலையில் இதனை விரைவுபடுத்துவதற்கு ஒவ்வொரு பொதுமகனும் இதற்காகப் பங்காற்ற முன்வர வேண்டும்.

அதேவேளை யுத்தத்தினை காரணம்காட்டி சாத்தியமான அவசியமான அபிவிருத்திப் பணிகளையும் மேற்கொள்ளாமல் தட்டிக்கழிப்பதும், காலந்தாழ்த்துவதும் தவிர்க்கப்பட வேண்டும். மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்ய தேவையான அபிவிருத்திப் பணிகளாவது மேற்கொள்ளப்படுதல் அவசியம். அரசின் முயற்சிகளில் அக்கறையுள்ள ஒவ்வொருவரும் அரசிற்கு விடுக்கும் ஆலோசனையும் கோரிக்கையும் அதுவே.

# நாட்டில் அமைதி வரவும் தமிழ் மக்கள் கௌரவமாக வாழவும் பேசுங்கள்

— சாணக்கியன்

இலங்கை இனப்பிரச்சினையில் கடந்த சில வாரங்களாக சில மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. விடுதலைப் புலிகளின் சர்வதேசத் தொடர்பாளரான திலகர் அண்மையில் முல்லைத்தீவுக்கு வந்து தமது தலைவருடன் இரகசியக் கலந்துரையாடலை நடாத்தியுள்ளார். இதனைத் தொடர்ந்து புலிகளின் பேச்சாளரான பாலசிங்கம், அரசியல் தலைவர் கரிகாலன் ஆகியோர் திலகருடன் மீண்டும் ஐரோப்பா சென்றுள்ளனர்.

திலகர் முல்லைத்தீவு வந்து சென்றதைத் தொடர்ந்தே பிரிட்டிஷ் பிரதி வெளிவிவகாரச் செயலாளர் 'லியான் ஃபொக்ஸ்' கொழும்புக்கு வந்து ஜனாதிபதிக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்குமிடையில் ஓர் ஒத்துழைப்பு உடன்பாட்டை ஏற்படுத்திச் சென்றுள்ளார்.

புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் நேரடிப் பேச்சுவார்த்தை இதுவரையில் ஏற்படாத போதிலும் கூட புலிகளுக்கும் பிரிட்டிஷ் பிரதிவெளிவிவகார அமைச்சருக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் சில காலமாக நடந்துவருகின்றன என்பதையே இது காட்டுகின்றது.

ஆனாலும் கூட அப்படியான பேச்சுவார்த்தைகள் நடக்கவில்லை என்பதையே அரசு மீண்டும் மீண்டும் கூறிவருகின்றது. பேச்சுவார்த்தையின் ஆரம்பத்திலேயே இதனை வெளிக்காட்டிக் கொள்வதானது, ஆயுதப் படைகள் மத்தியில் மனச்சோர்வுகளை ஏற்படுத்தும் என்பதாலும், சிங்கள எதிர்ப்பு சக்திகள் அனாவசியமாக கூச்சலிட்டு குட்டையைக் குழப்பலாம் என்பதனாலும், இவற்றிற்கு மேலாக புலிகள் எவ்வளவு தூரம் இறங்கி வருவார்கள்? உண்மையாகவே பேச்சுவார்த்தையை ஏற்றுக் கொள்கின்றார்களா? அல்லது இடையில் குழப்புவார்களா? என்பது தெரியாமல் அரசு பேச்சுவார்த்தை நடப்பதாக காட்டிக் கொள்ளவும் விரும்பாது.

ஐக்கிய தேசியக் கட்சியும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் எந்தத் தீர்வு வந்தாலும் அதனை மாறி மாறி எதிர்ப்பார்கள். என்ன நம்பிக்கையில் அவர்களுடன் பேசுவது என்ற கேள்வி உருவாகியதாலேயே ஜனாதிபதி எதிர்க்கட்சித் தலைவருக்கிடையிலான இணக்கப்பாட்டு ஒப்பந்தம் உருவானது.

எனவே எதுவுமே நடக்கவில்லையென அரசு மீண்டும் மீண்டும் வலியுறுத்தினாலும் மக்கள் அதனை நம்பத் தயாராயில்லை என்பதே உண்மை.

இவ்விணக்கப்பாட்டு ஒப்பந்தத்தை உருவாக்க லியான் ஃபொக்ஸ் அவர்கள் குறுகிய காலத்திற்குள் கொழும்புக்கு மூன்று முறை வந்து போயுள்ளார். அது மாத்திரமல்லாமல் ஐ.நா. செயலாளரின் பிரத்தியேக பிரதிநிதி, ஜேர்மனியின் பிரதி வெளியுறவு அமைச்சர், மொறீசியஸ் வெளிநாட்டமைச்சர் போன்ற பலரும் கொழும்புவந்தபொழுது இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாகவும் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தொடர்பாகவும் பல அமைச்சர்களுடன் விவாதித்துள்ளனர்.

> பிரித்தானிய முயற்சி ஆனது, இன்னொருவிதமான ராஜதந்திரப் போருக்குள் தமிழ் மக்களை இழுத்துவிடாமல், தமிழ்மக்கள் கௌரவமாக வாழக்கூடிய அமைதியை உருவாக்கக்கூடிய வகையில் இப் பேச்சுவார்த்தைகள் அமைய வேண்டுமென ஈ.பி.ஆர்.எல்.எஃப். எதிர்பார்க்கின்றது.

வெளியுறவு அமைச்சர் கதிர்காமர் அவர்கள் அரசாங்கத்தின் பிரசாரத் தூணாக விளங்குவதால் அவர் தவிர்ந்த, பேச்சுவார்த்தையை திறமையாகக் கையாளக்கூடிய அமைச்சர் ஒருவரை அடையாளம் காண்பதில் இவ்வெளிச்சக்திகள் தீவிரமாக இருப்பதாகத் தோன்றுகின்றது.

ஆனால் அமைச்சர்களைப் பொறுத்தவரை என்ன நடக்கின்றது என்பது அவர்களுக்கே தெரியாததால் யாரும் இதற்கு ஒப்புதல் அளிக்கத் தயங்குவதாகவே தோன்றுகின்றது.

இதேசமயம் நீதிஅரசியல்சாசன சீர்திருத்த அமைச்சர் அண்மையில் தென்னாபிரிக்கா போய்வந்ததும், மக்கள் மத்தியில் கேள்விகளை எழுப்பியுள்ளது. தென்னாபிரிக்காவில் அரசியல் சாசனம் பற்றி அறிந்து கொள்ளவே இவர் போனதாகக் கூறப்படுகின்றது. ஆனால் பேராசிரியர் பீரிஸ் மாதிரியான ஓர் அறிவாளி தென்னாபிரிக்க அரசியல் சாசனத்தைப் பற்றி அறிந்துகொள்ள ஒருவாரம் தென்னாபிரிக்கா செல்லத் தேவையில்லை என்றும் கூறுகின்றார்கள்.

மாறாக, தெரிவுக்குழுவில் முன்வைக்கப்பட்டுள்ள தீர்வுத்திட்டம் தொடர்பாக பாலசிங்கம், திலகர் போன்றோருக்கு விளக்குவதற்காகவே இத் தென்னாபிரிக்கா பயணத்தை மேற்கொண்டார் எனவும் கூறப்படுகின்றது.

பிரபாகரன் அவர்கள் பாலசிங்கம், கரிகாலன் போன்றோரை அனுப்பியுள்ளதானது, நிச்சயமாக பேச்சுவார்த்தை ஒன்றை ஆரம்பிப்பதற்கே என்பதில் ஐயமில்லை. ஏனெனில் பிரபாகரனைப் பொறுத்தவரையில் பேச்சுவார்த்தை என்பது இன்று மிகவும் அவசியமான ஓர் விடயமாகும்.

யாழ்ப்பாண வீழ்ச்சி, கிளிநொச்சி வீழ்ச்சி, மன்னார் பாதை திறந்தது போன்ற விடயங்கள் புலிகள் தொடர்பான மக்களின் நம்பிக்கையை சிதறடித்துள்ளன. இதனால் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நிதி சேகரிப்பது தொடக்கம், சகல செயற்பாடுகளுமே வீழ்ச்சி அடைந்து வருகின்றது.

வன்னியில் கூட மக்களை புலிகளால் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியவில்லை. எல்லோரும் இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசத்திற்கு போய்க் கொண்டிருக்கின்றார்கள். இதனால் இளைஞர்களைப் புதிதாக இயக்கத்திற்கு இணைத்துக் கொள்வதும் வீழ்ச்சி அடைந்து வருகின்றது.

இவற்றிற்கு அப்பால் சர்வதேச ரீதியாக பயங்கரவாதிகள் என்ற பெயரைச் சம்பாதித்து வைத்துள்ளார்கள். இதனால் கனடா, சுவிற்சலாந்து போன்ற நாடுகளிலும், அவ்வவ் அரசாங்கங்களே இவர்கள்மீது நெருக்குதலை அதிகரித்து வருகின்றன. இதனால் இவர்களின் மேலைத்தேச செயற்பாடுகளும் பல மடங்கு முடக்கப்பட்டு வருகின்றது.

இவற்றில் இருந்து மீள்வதற்கு ஒரே வழி பேச்சுவார்த்தையைஆரம்பிப்பதுதான். இதனைப் பிரபாகரனும் புரிந்து கொண்டுள்ளார் என்பதை நம்பலாம். ஆனால் இப்பேச்சுவார்த்தைகள் எவ்வளவுதூரம் முன்னேற்றகரமானதாக இருக்கும்? இது ஓர் தீர்வுக்கு வழிகோலுமா? என்பதெல்லாம் மிகப்பெரிய கேள்விகளாகும்.

பேச்சுவார்த்தைக்கான ஓர் குழுவை அனுப்பியதென்ற விடயமே புலிகள் தொடர்பாக ஓர் நல்லெண்ணத்தை வெளிநாடுகளில் ஏற்படுத்தியிருக்கும். இது புலிகளுக்கு சாதகமான ஓர் விடயமாகும்.

அண்மையில் கொழும்பிலிருக்கும் பிரிட்டிஷ் தூதுவர், பத்திரிகை ஒன்றுக்களித்த பேட்டியில் சிறீலங்கா அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எவ்வளவு தூரம் உரிமைகளைக் கொடுக்க தயாராக உள்ளது என்பதிலேயே பேச்சுவார்த்தை தங்கியுள்ளதாக கூறியுள்ளமையானது, அரசின்மேல் அழுத்தத்தை உருவாக்க வெளிச்சக்திகள் முனையும் என்பதையே காட்டுகிறது.

ஆனால் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண முயலும் இம் மூன்றாவது தரப்பினர், எவ்வளவு தூரம் இந்தியாவை இதற்குள் இணைத்துக் கொண்டுள்ளனர் என்பது கேள்விக்குரியது. ஏனெனில் ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர்களுக்கிடையில் ஏற்பட்ட இணக்கப்பாட்டு ஒப்பந்தம் உருவான விடயம், ஒப்பந்தம் கையெழுத்தான பின்னரே இந்தியாவுக்கு தெரியவந்தது. இது இந்தியாவிற்கு சில கசப்புணர்வுகளை ஏற்படுத்தி இருக்கிறதாக நம்பப்படுகின்றது.

இலங்கையில் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்காக இந்தியா நேரடியாகத் தலையிட்டு இந்திய–இலங்கை ஒப்பந்தம் ஒன்றையும் உருவாக்கியது. இதனை நிறைவேற்றத் தனது படையணிகளையும் இங்கு அனுப்பி வைத்தது. இதில் 1200க்கு மேற்பட்ட இந்திய இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர்.

இந்தியாவின் முயற்சியாலேயே இந்நாட்டில் மாகாணசபை என்ற ஓர் அமைப்பு முறையும் உருவானது. ஆனால் ராஜீவ்காந்தியை புலிகள் கொலை செய்த பின்னர் ஏற்பட்ட இந்திய அரசுகள், இலங்கையின் பிரச்சினையில் தலையிடாமை என்ற கொள்கையையே கடைப்பிடித்தன.

இதனால் வி.பி.சிங், நரசிம்மராவ், தேவகௌடா, இன்றைய பிரதமர் குஜரால் எல்லோருமே 'இது உள்நாட்டுப் பிரச்சினை, இதனை நீங்களே தீர்க்க வேண்டும்' என்றே இலங்கை அரசுக்கும், தமிழ்க் கட்சிகளுக்கும் கூறிவந்துள்ளன.

இது உள்நாட்டுப் பிரச்சினை இதனை நீங்களே தீர்க்க வேண்டும் என்ற இந்திய நிலைப்பாடானது, வேறு வெளிநாடுகள் இதில் தலையிடக்கூடாது என்பதையும் மறைமுகமாகச் சுட்டி நிற்பதை நாம் காணலாம்.

எனவே ஒரு கட்டத்தில் எமது பிரச்சினையைத் தீர்ப்பதற்காக முழுமையாகத் தலையிட்ட இந்தியாவைப் புறந்தள்ளிவிட்டு, அவர்களின் ஒத்துழைப்பு இல்லாமல் புலிகளுடன் ஓர் பேச்சுவார்த்தை நடாத்துவது எவ்வளவு தூரம் சாத்தியமானது?

எமது பிராந்தியத்தில் மிகவும் பெரியதும் வலுவானதுமான இந்தியாவின் ஒப்புதல் இல்லாமல் நடைபெறும் பேச்சுவார்த்தைகள் விழலுக்கிறைத்த நீர்போல் ஆகிவிடக் கூடும். எனவே பேச்சுவார்த்தையில் ஈடுபடுவோர் இதனை தமது சீரிய கவனத்திற்கு எடுக்க வேண்டியது தவிர்க்க முடியாதது.

ஆனால் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்ட இணக்கப்பாடு ஒப்பந்தம் தொடர்பாக, அது கையெழுத்தாகும் வரை இந்தியா இருட்டிலேயே வைக்கப்பட்டிருந்ததும், அது இந்தியாவிற்கு விசனத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும். இந்நிலை தொடராமல் இருக்க வேண்டுமாயின், ஆரம்பத்தில்இருந்தே இந்தியாவும் இதில் ஓர் பங்குதாரராக இருக்க வேண்டும்.

> இது உள்நாட்டுப் பிரச்சினை இதனை நீங்களே தீர்க்க வேண்டும் என்ற இந்திய நிலைப்பாடானது, வேறு வெளிநாடுகள் இதில் தலையிடக்கூடாது என்பதையும் மறைமுகமாகச் சுட்டி நிற்பதை நாம் காணலாம்.

இதனை விடுத்து, தாம் எடுக்கும் முடிவுகளுக்கு இந்தியாவை பணியவைக்கலாம், இல்லையேல் ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா போன்றவை இந்தியா மேல் நிர்ப்பந்தங்களை உருவாக்கலாம் என நினைத்தால், நாம் மீண்டும் வெளிச்சக்திகளின் ராஜதந்திரப் போருக்குள் (Diplomatic War) மூழ்கியவர்கள் ஆவோம். அதற்குள் இருந்து விடுபட இன்னும் பல வருடங்கள் போகலாம்.

ஆகவே பிரித்தானிய முயற்சி ஆனது, இன்னொருவிதமான ராஜதந்திரப் போருக்குள் தமிழ் மக்களை இழுத்துவிடாமல், தமிழ்மக்கள் கௌரவமாக வாழக்கூடிய அமைதியை உருவாக்கக்கூடிய வகையில் இப் பேச்சுவார்த்தைகள் அமைய வேண்டுமென ஈ.பி.ஆர்.எல்.எஃப். எதிர்பார்க்கின்றது.


---

## தியாகிகள் தினம்





எமது இலக்கை அடைவதற்கான எமது போராட்டப் பாதையானது சுலபமான, நேரான தன்மையைக் கொண்டதல்ல. எமது போராட்டத்தோடு பல்வேறுபட்ட சக்திகள், நிலைமைகள் தொடர்புடையனவாக செயற்பட்டு வருகின்றன. இவற்றின் விளைவாக எவ்வளவோ நெளிவு சுளிவுகளை, மேடு பள்ளங்களை நாம் சந்திக்க நேரிடுகின்றது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் மூடத்தனமாக முட்டி மோதி எமது போராட்ட இலக்குக்கு நாசம் அழிவு தேடிவிடக் கூடாது என்பதில் நாம் மிக நிதானமாக இருந்து செயற்பட வேண்டியுள்ளது.

– தோழர் பத்மநாபா
(1985 ஜூனில் 'போர்நிறுத்தமும் பேச்சுவார்த்தையும்' பிரசுரத்திலிருந்து)



# ඩග්ලස් දේවානන්දගේ ස්විස් බැංකු ගිණුමේ රුපියල් කෝටි 100 ක් කොයින්ද?



சென்றவாரம்வரை டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈ.பி.டி.பி. இயக்கத்தின் சார்பில் 9 பேர் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்தனர். இதில் இருவரை கட்சி அங்கத்துவத்திலிருந்து டக்ளஸ் தேவான்ந்தா நீக்கியதைத் தொடர்ந்து தற்போது 7 உறுப்பினர்களே உள்ளனர். நீக்கப்பட்டவர்களில் ஒருவர் ஈ.பி.டி.பி.யில் பதில் தலைவராக இருந்த ராஜேந்திரன் ராமேஸ்வரன்-வயது34. இன்னொருவர், இவரது சகோதரரான ராஜேந்திரன் ராமநாதன்-வயது 30. இவர்கள் முன்னர் பெரிய போராளிகள். 1983ம் ஆண்டில் ஈ.பி.ஆர்.எல்.எப். இன் உறுப்பினர்களாக இந்தியாவில் ஆயுதப் பயிற்சி பெற்றனர். இவ்விருவரும் 1994 பொதுத் தேர்தலில் யாழ் மாவட்டத்தில் சுயேட்சைக்குழு-II இல் போட்டியிட்டு பாராளுமன்றத்திற்குத் தெரிவாகினர்.

கடந்த 7ம் திகதி (07.05.1997) கொழும்பில் எம்மைச் சந்தித்த இவ்விருவரும் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர். அப்பேட்டியைக் கீழே தருகிறோம்.

# "டக்ளஸ் தேவானந்தாவுக்கு சுவிஸ் வங்கியில் 100 கோடி ரூபா"

'லக்பிம' பேட்டியில் முன்னாள் ஈ.பி.டி.பி. எம்.பி.க்கள்

**கட்சியின் அரசியற் திட்டத்திற்கெதிராக நீங்கள் இருவரும் தனிப்பட்ட வியாபாரம் செய்ததற்காக உங்களைக் கட்சியிலிருந்து நீக்கியதாக டக்ளஸ் தேவானந்தா கூறியுள்ளாரே?**

அவர் அப்படிக் கூறினாலும், அவரது அமைப்பினுள் அவர் செயற்படுத்திச் செல்லும் சர்வாதிகார நிர்வாக முறைக்கு எதிர்ப்புத் தெரிவித்தமையும் இன்னும் பல காரணங்களுமே எம்மை விலக்கியமைக்கு அடிப்படைக் காரணம் என நாம் நினைக்கிறோம்.

அவருடைய சகல திட்டங்களும் பெயரளவிலேயேஉள்ளன. எல்லாத் தீர்மானங்களும் செயலாளர் நாயகத்தினாலேயே எடுக்கப்படுகின்றது. அதற்கப்பால் யாருக்கும் போக முடியாது. போனால் அவ்வளவுதான். இதே நிலைமைதான் எமக்கும் ஏற்பட்டது.

**நீங்கள் இன்னும் பாராளுமன்ற உறுப்பினர்களா?**

ஆம். சுயேட்சைக்குழு-II இன் அபேட்சகர்களாகவே நாம் நியமிக்கப்பட்டோம். ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகத்தினால் எம்மை நீக்க முடியாது.

**உங்களிருவரையும் நீக்கிவிட்டதாகக் கூறியபின் நீங்கள் பாராளுமன்றம் சென்றீர்களா?**

அதன்பின் ஒரு நாள் மாத்திரமே பாராளுமன்றம் கூடியது. ஆனால் எமக்கிருந்த பல அச்சுறுத்தல்கள் காரணமாக நாம் அங்கு செல்லவில்லை.

**பாராளுமன்ற அங்கத்தவர்கள் என்ற முறையில் அரசாங்கத்தால் பாதுகாப்புக் கொடுக்கப்படவில்லையா?**

இல்லை. எமக்கு ஈ.பி.டி.பி.யே பாதுகாப்பு வழங்கியிருந்தது. அதனையும் மூன்று தினங்களுக்கு முன்னர் நீக்கிவிட்டது. இப்போது கொழும்பில் எமக்கு எவ்வித பாதுகாப்பும் இல்லை. அதனால் எமக்குப் பாதுகாப்பு பெற்றுத் தருமாறு எழுத்துமூலம் சபாநாயகருக்கு கோரிக்கை விடுத்துள்ளோம்.

**ஏன், உங்கள் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதா?**

ஆம். ஆரம்பத்திலிருந்தே எல்.ரி.ரி.ஈ.யினால் அச்சுறுத்தல் இருந்தது. இப்போது ஈ.பி.டி.பி.யினாலும் அச்சுறுத்தல் இருக்கிறது. தனக்கெதிரான எவரையும் அழித்துவிடுவதுதான் டக்ளஸ் தேவானந்தாவின் கொள்கையாகும்.

**எப்படி அவ்வாறு நீங்கள் கூறுவீர்கள்?**

ஏனென்றால் எனது (ராஜேந்திரன் ராமேஸ்வரன்) காரியதரிசியைக் கடத்திச் சென்று மூன்று



மாதங்கள் [illegible] வைத்திருந்தனர். அக்காலத்தில் அவரை மிகவும் கடுமையாகத் தாக்கி, மின்சார அதிர்ச்சிச் சித்திரவதைகள் செய்ததுடன், இரண்டு நாட்கள் சாப்பாடு கூடக் கொடுக்கவில்லை. இவ்வாறு தாக்கியவரும் ஈ.பி.டி.பி.யின் பாராளுமன்ற உறுப்பினர்தான்.

**தேவானந்தாவுடன் நீங்கள் இருவர் மட்டும்தான் கருத்துமுரண்பாடு கொண்டுள்ளீர்களா?**

நாம் மாத்திரமல்ல, அவரது சர்வாதிகாரத்திற்கு எதிரானவர்கள் பலர் உள்ளனர்.அவர்களும் இன்றோ நாளையோ வெளியேற்றப்படுவார்கள்.

**உங்களுக்குப் பாராளுமன்ற அங்கத்தவர்கள் என்ற முறையில் வழங்கப்பட்ட வாகனங்கள் எங்கே?**

அவற்றை அவர் (டக்ளஸ்) எடுத்துக் கொண்டார். உண்மையில் ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினர்கள் யாழ்ப்பாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தினாலும் எவரும் அங்கே செல்வதில்லை. அங்கிருந்தது நாமிருவர் மாத்திரமே. ஆனால் எமக்குக் கிடைத்த இரண்டு வாகனங்களையும் தேவானந்தாவே உபயோகித்தார். அவை கொழும்பில் இருந்தன. அது மாத்திரமன்றி பாராளுமன்ற அங்கத்தவர்கள் கொடுப்பனவாக எமக்கு வழங்கப்படும் 21,000 ரூபாவில் 8,000 ரூபா மட்டுமே எமக்கு வழங்கப்பட்டன. எனது தம்பியின் வாகனத்தை அவர் தன் விருப்பப்படி விற்றுவிட்டார்.

**அப்படியானால் அது சட்டவிரோத செயல்தானே?**

ஆம், அவருக்கு இது ஓர் சிறிய விடயம். இதைவிட எவ்வளவோ சட்டவிரோத வேலைகளை அவர் செய்கிறார்.

**அவர் செய்யும் சட்டவிரோத வேலைகள் எவை?**

எமக்கு நன்கு தெரிந்த விடயம், எமது படைப்பிரிவின் அங்கத்தவர்களுக்கு அரசாங்கம் சம்பளம், ஆயுதங்கள் கொடுத்து வருகிறது. செயலாளர் நாயகம் இந்த அங்கத்தவர்கள் எண்ணிக்கையை அதிகமாகக் காட்டி, மேலதிகமாகக் கிடைக்கும் பணத்தையும் ஆயுதங்களையும் தன்னுடன் வைத்துக் கொள்கிறார். இதைவிட இன்னும் பல வேலைகளைச் செய்கிறார். அவ்வாறில்லாவிட்டால் எப்படி அவரது சுவிஸ் வங்கிக் கணக்கில் 100 கோடி ரூபா சேமிக்க முடியும்? 1990இல் அவரும் நானும் உடுத்த உடுப்புடனேயே இலங்கை வந்தோம்.

**நீங்கள் இருவரும் ஈ.பி.டி.பி.யிலிருந்து விலகிவிட்டீர்கள்தானே? இப்போது யாருக்கு ஒத்துழைப்பு வழங்கப் போகிறீர்கள்?**

ஈ.பி.டி.பி.யிலிருந்து நீக்கப்பட்ட பின் எம்மை ஒருவரும் தேட வில்லை. ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஓர் பிரதிநிதிமூலம் எம்மைப்பற்றி விசாரித்துள்ளார். அதனால் நாம் அவருக்கு ஒத்துழைப்பு வழங்குவோம்.

**இனி நீங்கள் ஈ.பி.டி.பி.யுடன் சமாதானமாக மாட்டீர்களா?**

ஈ.பி.டி.பி.யுடன் எமக்குப் பிரச்சினையில்லை, அதன் செயலாளர் நாயகத்துடன்தான் எமக்குப் பிரச்சினை. அவர் அங்கு தலைவராக இருக்கும்வரை நாம் எந்தத் தொடர்பும் வைத்துக்கொள்ள மாட்டோம்.

**இப்போது நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்?**

மூன்று நாட்களுக்கு முன் நாம் 'மனித சேவைகள்' என்ற அமைப்பை ஏற்படுத்தினோம். இதில் சிங்கள், தமிழ், முஸ்லீம் அனைவரும் அங்கம் வகிக்கின்றனர். இதன் தலைவர் ஓர் பௌத்த பிக்கு, நாம் இருவரும் உதவித் தலைவர்கள்.

முழு நாட்டிலுமுள்ள மக்களை ஒற்றுமைப்படுத்த உழைப்பதும், வடகிழக்கு யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் சாதி மத பேதமின்றி உதவுவதுமே இதன் நோக்கமாகும்.

**இந்த அமைப்புக்கு வெளிநாட்டு உதவி கிடைக்கின்றதா?**

இப்போதைக்கு இல்லை. ஆனால் பின்னர் பெற்றுக் கொள்ள முயற்சிப்போம்.

**நீங்கள் இருவரும் பாராளுமன்ற வாக்கெடுப்பின்போது அரசாங்கத்திற்கெதிராக வாக்களிப்பீர்களா?**

இப்போதைக்கு ஒன்றும் சொல்ல முடியாது. ஆனால் டக்ளஸ் தேவானந்தாவை நேரடியாக எதிர்க்கிறோம்.

**அரசின் தீர்வுத் திட்டம் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?**

அதுபற்றி தற்போது ஒரு கருத்தும் இல்லை. ஆனால் யுத்தத்திற்கு விரைவான தீர்வு காண வேண்டும் என்றே கூறுகிறோம். நாம் தெற்கில் சிங்கள மக்களுடன் இன பேதமின்றி, முழு இலங்கையோடு ஒற்றுமையான ஓர் அமைப்பை உருவாக்க முயல்கின்றோம். இது டக்ளஸ் தேவானந்தாவுக்கு விருப்பமில்லாத ஒன்று.

எமக்குத் தேவை சமாதானம். நாம் பெரும்பான்மையினருடன் ஒன்றிணைந்து செயற்பட விரும்புகின்றோம். இக்கருத்து நீண்டகாலமாக எமக்குள் இருந்தது. டக்ளஸ் தேவானந்தாவின் இனவாத சர்வாதிகார நடவடிக்கைகளை நாம் அனுமதிக்க மாட்டோம். அவர் பிரபாகரனை விட மோசமான ஓர் இனவாதி என்பதை நாம் பயமின்றிக் கூறுகிறோம்.

## யாழ் குடாநாட்டில், மக்கள் பாவனைப் பொருட்கள் அபகரிப்பு

குடாநாட்டில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளிலிருந்து, பாவனைப் பொருட்கள் புலிகளால் அபகரித்துச் செல்லப்படுகிறது. அண்மையில் தென்மராட்சிப் பகுதியில் உள்ள ப.நோ.கூ.சங்கக் கிளைகளிலிருந்து பொருட்கள் எடுத்துச் சொல்லப்பட்டுள்ளன. அரிசி, மா, சீனி, பருப்பு, பற்பசை, பால்மா போன்ற பொருட்களே இவ்வாறு அபகரிக்கப்பட்டுள்ளது. இதனால் பாவனையாளர்கள் மிகவும் அதிருப்தி அடைந்துல்ளனர். ப.நோ.கூ.சங்க நிர்வாகிகள் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தர்மசங்கடமான ஒரு நிலையில் உள்ளனர். "இது ஒண்டும் புதுசு இல்லை. முன்னையும் நடந்ததுதான்... முன்னை வெளிப்படையாய் நடந்தது. இப்ப ஒளிவு மறைவாய் நடக்குது..." என்கிறார் ஒரு முதியவர்.

வடமராட்சிப் பகுதியில் இதுபோன்றே ப.நோ.கூ.சங்கக் கிளைகளில் இருந்து பொருட்கள் அபகரித்துச் செல்லப்பட்டதனால், குறிப்பிட்ட சங்கக் கிளைகள் இராணுவத்தினரின் அணைக்கு உள்ளே இராணுவ பாதுகாப்பு உள்ள பகுதிக்கு மாற்றப்பட்டது. இதனால் பாவனையாளர்கள் நீண்ட தூரம் அலைந்து மிகவும் சிரமப்பட வேண்டியிருந்தது. இதேவேளை புத்தூரில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து புலிகளால் கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களில் ஒரு பகுதி, புலிகளின் நடமாட்டம் உள்ள பகுதிகளில் சிறு தனியார் கடைகளில் பதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதனால் உள்ளூர் கடைச் சொந்தக்காரர்கள் சிலர் இராணுவத்தினரின் சந்தேகத்திற்கு இலக்காகியுள்ளனர்.

# யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு...

அரச உயர்மட்டங்களில் உள்ளவர்கள் தங்களது செயற்பாட்டில் இன்னும் சுயநல நோக்கங்களையே இலக்காகக் கொண்டுள்ளார்கள். அதன் மூலம் அவர்கள், தாம் சுகபோக வாழ்க்கை வாழ்கிறார்கள். யாழ்ப்பாணத்திலிருந்து கல்விமான்கள் வெளியேறுவதற்கு இதுவும்ஒரு காரணம்.


குறிப்பாக பிரதேசசெயலகத்தின் ஊழியர் போதாமையை நிவர்த்தி செய்வதற்கு யாழ்ப்பாணத்தில் தகுதியான கல்விமான்கள் உள்ளபோதும், அதனை எடுத்துக் கூறி வெற்றிடங்களை நிரப்ப, அந்தந்தப் பிரதேச செயலக அதிபர்கள் அழுத்தங் கொடுக்கத் தவறிவிட்டனர்.

பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை ஓர் பெரும் பிரச்சினையாக உள்ளது. இருந்தபோதிலும் பாடசாலை மட்டங்களில் அதுபற்றி எவரும் அக்கறை காட்டுவவதாகத் தெரியவில்லை.

தாம், இவர்களை விடுதலை செய்யும்படி அழுத்தம் கொடுக்கிறோம் என்கிறார்கள். அந்த வார்த்தைகளுக்காக நாளொரு வண்ணம் பொழுதொரு மேனியாக அனைத்துக் கட்சிகளினதும் செயலக வாசற்படி மிதிக்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தின் பொருளாதாரத்தை நிர்ணயிக்கும் முக்கிய காரணியாக கப்பல் போக்குவரத்து காணப்படுகிறது. இந்த கப்பல்களின் மூலமே யாழ்ப்பாணத்திற்கு தேவையான பொருட்கள் எடுத்து வரப்படுகிறது.

இதில் தனியார் வர்த்தகர்களும் பெரும்பங்கு வகிக்கிறார்கள். இவ்வாறான வர்த்தகர்களில் சிலர் நியாயமற்ற முறையில் அனுமதிகளைப் பெற்று அத்தியாவசியமின்றியஅதிக வருவாய் தரும் பொருட்களை இறக்குமதி செய்கிறார்கள். இதற்கு காரணம் இவற்றோடு சம்பந்தப்பட்ட உயர் மட்டங்களே.




இவ்வாறு அரச நிறுவனங்கள், பொது ஸ்தாபனங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் யாவுமே ஊழியர் பற்றாக்குறையுடனே இயங்குகிற அதேவேளை, யாழ்ப்பாணத்தில் வேலையின்றித் தவிக்கும் இளைஞர்கள் மறுபுறம். இதற்கு தீர்வுகாண வேண்டுமெனில், அரச உயர் மட்டங்கள் சிந்திப்பதே பயனைத்தரும்.

எவ்வாறெனினும், அரசும் புலிகளும் விட்டுக் கொடுத்தல், ஒத்துப் போதல் என்பவற்றினூடாக பிரச்சினைக்குத் தீர்வுகாண முன்வருவார்களாயின், யாழ்ப்பாணத்தில் அரச உயர்மட்டங்களிடையே ஏற்படும் வழுக்களும் ஓரளவு குறைக்கப் படும். அதுவரையில் மக்களின் அவல வாழ்க்கையில் குளிர்காய்வதாகவே அரச மட்டங்கள் காணப் படும் என்பது யாவரும் மறுக்கமுடியாத ஒன்றாகும்.

இவ்வாறான நிலை காலங்காலமாக காணப்படினும் மக்கள் திரை விலக்கிப் பார்க்க முடியாது போனதும் உண்டு; கண்டிருப்பினும் சுட்டிக்காட்ட தவறியமையும் உண்டு.

கடந்த ஒருவருடகாலமாக இராணுவம் இளைஞர்களைக் கைது செய்வது என்ற செயற்பாட்டில் மாற்றம் ஏற்படுத்தாது தொடர்ந்து வருகிறது. ‘காணவில்லை’ என கைவிரிப்பதும், அதனையிட்டு பெற்றோர் நினைவிழப்பதும் ஓர் சாதாரண நிகழ்வாகிவிட்டது.

இவ்வாறான விடயங்களில் அக்கறையோடு செயற்பட்டு, இவர்களை மீட்டுக் கொடுப்பதில் யாழ் அரச அதிபர் உட்பட்ட உயர்மட்டங்கள் அக்கறை காட்டுவதில்லை. தமிழ்க் கட்சிகள், அவர்கள் இருக்கிறார்களா எங்கே இருக்கிறார்கள் என்பதை மட்டும் பெற்றுக்கொடுக்கின்றன. அதேவேளை அரசிற்கு

யாழ் மக்களுக்கு இன்றியமையாத ஒரு நிலையமாக யாழ் போதனா வைத்தியசாலை காணப்படுகிறது. இலவசமாக வைத்தியம் என்பதைவிட, சத்திர சிகிச்சை முதற் கொண்டு தேவைப்படும் பெரும்பாலான வைத்தியவசதிகள் கொண்ட ஒரு வைத்தியசாலை அதுவென்றே கூறலாம்.

இப்போதெல்லாம் அங்கு எந்த வித வசதியுமில்லை.அப்படியெனில் அரசு கூறிவந்தவை அனைத்தும் பொய்யானவை... அல்லது வைத்தியசாலையில் மோசடி இடம்பெறுகிறது.

ஒரு நோயாளி அங்கு சென்று, அவரது நோய் கண்டறியப்பட்டு அதற்குரிய மருந்து பெற்றுச்செல்ல குறைந்தது 6அல்லது 7மணி நேரம் எடுக்கும். அதேவேளை அவசர சத்திரசிகிச்சைகள் கூட செய்ய மறுக்கிறார்கள். காரணம், சத்திரசிகிச்சைக்குரிய நூல் இல்லையாம். இவை அனைத்திற்குமான தீர்வு என்பது எப்போ?

இவைகள் அனைத்துமே மக்களின் அன்றாட பிரச்சினைகளாகி விட்டன. இவைகளே மக்களிற்கு சாதாரண சுமைகளாக இருக்கும் போது, மேலதிகமான சுமைகளை அவர்கள் எப்படி சுமப்பது? இவற்றிற்கான முடிவுகளை யார் பெற்றுத் தரப்போகிறார்கள்?

தமிழ் மக்கள் சிங்கள அரசிடம் இருந்து தீர்வு ஒன்றை பெறுவதன் முன், இவைகள் ஒரு பிரச்சினையாக இருப்பின் எதற்கு மக்கள் முகம் கொடுப்பது?

அன்புடன்,
தா. மயில்வாகனம்,
யாழ்ப்பாணம்.



# கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு..

*அன்புள்ள அண்ணா!*

நலம், நாடுவதும் அதுவே. நிற்க. உங்கள் கடிதம் கிடத்தது. மிகவும் சந்தோஷம். இப்பவும் உங்கு நாடகங்கள் நடக்கின்றனவா? உங்களை விட்டு ஊரே போய்விட்டுது என்று எழுதியிருந்தீர்கள். அந்த வரிகளை வாசித்தபோது உண்மையிலேயே நெஞ்சக் கூட்டுக்குள் கவலை வந்து முட்டியது. நாங்கள் நினைப்பது போல் ஒன்றும் நடப்பதில்லை என்று எண்ணிச் சமாதானப் பட்டுக்கொள்ள வேண்டியதுதானே....

நான் இங்கிருந்து ஒன்பது மாதங்களாகக் கனடாவுக்குப் போய்க் கொண்டிருக்கிறேன். சிலர் இரண்டு கிழமைகளிலும்போகிறார்கள். சிலர் மூன்று வருடங்களாகவும் போய்க் கொண்டிருக்கிறார்கள்.

நான் இதுவரையில் பத்துத் தடவை Flight ல் ஏறியிருக்கிறேன். இருநாட்கள் தொடர்ச்சியான ரயில் பயணம். சுமார் ஐந்து மணிநேரப் படகுப் பயணம். இவ்வளவு பயணத்தினாலும் கம்போடியாவில் 71 தினங்களும், சீனாவில் இரண்டரை மாதங்களும், சுவீடனில் 60 நாட்களும் தங்க முடிந்தது. மீண்டும் இப்போது கொழும்பில். இன்னும் எத்தனை நாடுகள் எத்தனை நாட்கள் பயணம் செல்ல நேரிடுமோ தெரியாது.

குளிர் சுவாத்தியம் இப்போது எனக்கு ஒத்து வருகுது என்பது புதுமையானது. கொழும்புக்குவந்த பிறகும் தலையிடி அது இது எண்டு வருத்தம் தான். படிப்பதற்கு நிறைய விருப்பம். வசதியும் இருக்குது, ஆனால் முடியவில்லை. C.I.M.A. ஒரு தடவை எடுத்தேன். தொப்பியாய் போச்சு. பிறகு எடுப்பதற்காக படித்துக் கொண்டிருந்தபோது மூன்றாவது தடவையாய் பிடிபட நேரிட்டது. 14 நாட்கள் சிறைவாசம், தமிழனாய் பிறந்தமைக்காக.

இப்படி இந்த இரண்டு வருடத்திலும் பல சம்பவங்கள். புதுப்பது அனுபவங்கள். எங்கள் எல்லோருக்கும் ஒருவகையில் இது பொதுதானே. தொலைக்காட்சியில் புத்தூர் சந்தியைக் கடந்து சென்ற மக்களைப் பார்த்தோம். ஆனந்தப் பட்டோமோ அல்லது அவஸ்தைப் பட்டோமோ என்று புரியவில்லை.

உவ்விடமிருந்த பலரும் இப்போ இங்குள்ளனர். நேமி, ரகு, ராஜி, ஜீவா, டொலி.... என்று பட்டியல் மிகவும் நீண்டது. எங்கள் சிநேகிதன் பகிரதனின் தம்பி குமணன் சீனாவில், குண்டன் மயூரதன் கம்போடியாவில், ஜெயகணேஸ் (பப்பி) கப்பலில். நரேனுக்கு கலியாணம் நடக்கப் போகுது. பனி வாத்தி பரமு குடும்பத்தோடை கனடா போட்டுது.

வேறு என்ன? எனக்கு இப்போது ஒன்றிலும் அவ்வளவு விருப்பமில்லை. அதனால் எவருக்கும் கடிதம் கூட ஒழுங்காக எழுதுவதில்லை. மற்றபடி எவர் மீதும் கோபமில்லை. ஒட்டாத உறவுகளுடன் வாழ்க்கை நகர்கிறது. Day by Day வாழ்க்கைப் பயணம் என்பது எனக்காகத்தான் எழுதப்பட்ட வரி போலும்.

பிறபின்.

இவண்,
கொழும்பிலிருந்து பறக்கத் துடிக்கும் தம்பி செல்லக்கிளி.

# வன்னியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு

முள்ளியவளை
25.01.97


*அன்புடன் அனைவருக்கும்,*

என் அன்பும் நன்றியும் வணக்கமும். கிளாலிக் கடற்பரப்புக்கு அப்பால் வாழும் என்னை அறிந்த ஒவ்வொருவருக்கும் என் அன்பான விசாரிப்புக்கள் உரியதாகுக. நீங்கள் நலமாக இருப்பீர்கள் என நம்புகின்றேன். இவ்விடம் நாம் நலம் என்று எழுத முடியவில்லை.

ஏதோ ஒரு அவசரம் உந்தித் தள்ளியதால் நாம் கிளாலிக் கடல் கடக்கவும் நீங்கள் வலிகாமம் திரும்பவும் நேர்ந்துவிட்டது. தற்செயலான இந்த நிகழ்வு, இவ்வளவு நீண்ட பிரிவையும், சோகத்தையும், வேதனையையும் தரும் என்று நாம் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

காலம் நெருப்பை அள்ளிக் கொட்டுகிறது. உவ்விடம் நிலைமைகள் எப்படி என்று எப்படிக் கேட்க முடியும்? எல்லாம் புதிராகவே உள்ளது. காலம் புதிர்களை வளர்த்துச் செல்கிறதா? ஏமாற்றுகிறதா? எதுவும் புரியாமலே இருக்கிறது.

இங்கு எல்லாத் தடைகளையும் தாண்டி மலேரியா மட்டும் இலகுவாக வந்து பரவுகிறது. ஒவ்வொருவரும் மெலிந்து நிறம் மாறி உருவம் மாறி.... எனினும் இன்னமும் உயிருடன் இருக்கிறோம். பாரிய அளவில் இராணுவ நடவடிக்கை இடம்பெறலாம் என்ற பயம் எல்லோர் மனதிலும் ஆழமாக ஊடுருவியுள்ளது. நடந்தால் அழிவுதான் மிஞ்சக்கூடும்.



யாழ்ப்பாணத்தின் புதிய வாழ்வு எப்படி? எந்த மார்க்கத்தில் அது செல்கிறது? எல்லாம் புதிய அனுபவங்கள். எதை? யார்? எப்படி? என்னவென்று சொல்வது? எல்லாம் ஒரே வட்டத்தில் சுழன்று வருகின்றனவோ?

‘பாட்டா’ செருப்புக்கூட அணியாத பாதங்களுடன் செம்மண் பரப்பில் நடந்து திரிந்ததுவும், ஓங்கி உயர்ந்த பனை வடலிக்களுக்கிடையில் நாட்கள் கழிந்ததுவும், பாழடைந்த நெசவுசாலைக்கருகில் பழங்கிணற்றின் படிகளில் இருந்து நண்பர்களுடன் ‘பம்பல்’ அடித்ததுவும் நினைவுகளில் இப்போதும் இனிக்கிறது.

எதை நாம் இழந்தோம்? என்று எண்ணிப் பார்க்கிறபோது மலைப்பாக இருக்கின்றது. தாயின் மடியைப் போல சுகம் தரும் வலிகாமத்து மண்ணை பிரிந்திருக்க இம்மியளவும் விருப்பமில்லை. இருந்தாலும் சுயகௌரவம், தனி மனித ஆளுமை என்பவற்றை இன்னமும் தொலைத்து விடவில்லை என்ற ஒரேயொரு திருப்தி மட்டுமே உடலுக்குள் உயிரை ஒட்டி வைத்திருக்கின்றது.

அமாவாசைக்குப் பிறகு பௌர்ணமியும், இருளுக்குப் பின்னர் வெளிச்சமும் வரும் என்பது நியதி.

வேறு எதை எழுத....

மீண்டும் நாம் ஒன்றாய்க் கூடி உல்லாசமாகக் குதூகலிக்கும் நாள் வரட்டும் என்ற எதிர்பார்ப்புதான் ஏக்கமாக உள்ளது.

இப்படிக்கு,
க. செல்வக்குமார்,
முள்ளியவளை.

பண்டு நிகழ்ந்ததனைப்
பாடுகின்ற இப்பொழுதும்
மண்டு துயர் எனது
மார்பையெல்லாம் கவ்வுதே.
- பாரதி



சபாலிங்கம் கொலை சுதந்திரமான எழுத்து இயக்கத்துக்கும், செயற்பாடுகளுக்கும், வெளிப்படைத் தன்மைக்கும் புகலிடத்தில் விழுந்த முதலாவது மரண அடி....

சபாலிங்கம் என்று ஒருவரே இருக்கவில்லையென்ற அருவருப்பான கெட்ட நோக்கத்தோடு காலம் வேகமாக நகர்கிறது....

## சபாலிங்கம் – இன்று

தமிழ்ச் சமூகத்தில் ஒவ்வொரு தனி மனிதன் குறித்த அக்கறையும் கரிசனையும் நேற்று இருந்ததைவிட இன்று நேரெதிராக மாற்றப்பட்டிருக்கின்றது.

'தனியொருவனுக்கு உணவில்லையெனில்' என்ற கவிதைக்கு நேற்றைய அர்த்த பரிமாணம் இன்று இல்லை. ஒரு மனிதன்/மனித வித்தியாசமானவனாக / வித்தியாசமானவளாக இருந்தால், இருக்கின்ற நிலைமைகளோடு ஒத்துப் போக முடியாதவனாக இருந்தால் "அவனைச் சுடு" என்பது இந்தச் சாதி தார்மீக ரீதியில் ஏற்றுக்கொண்டுவிட்ட சமூக பாசிச விதியாகி விட்டிருக்கின்றது.

சபாலிங்கம் இறக்கும் இறுதிக்காலம் வரை அவரது செயற்பாடுகளை தொகுத்து அறிய நேரிட்டோரில் ஒருவர், "இவ்வளவும் செய்தால் சுடுவாங்கள்தானே" என்று கொலைக்கான மதிப்புரை கூறியது – இந்த நிலை மாறக்கூடியது அல்ல என்பதைக் காட்டுகின்றது. இன்னும் இரண்டு தலைமுறைக்கு மேலும் தொடரவல்ல இந்த ஆயுதக் கலாசாரம் தொடரும்வரை.

அவர் கொல்லப்படுவதற்கு முன், அவர் செயற்பாடுகளுக்கு நம்பிக்கையளித்தோர் ஊக்கம் கொடுத்தோர், சேர்ந்து உழைத்தோர் இன்று அச்சத்துடன் அநேகமாக பொதுச் செயற்பாடுகளில் இருந்து ஒதுங்கி விட்டனர். எழுதியோர் தம் மொழியை மாற்றி எழுதுகின்றனர்; அல்லது எழுதுவதை நிறுத்திவிட்டனர். எழுத்து இறந்து பிறக்கின்றது.

சபாலிங்கம் கொலை சுதந்திரமான எழுத்து இயக்கத்துக்கும், செயற்பாடுகளுக்கும், வெளிப்படைத் தன்மைக்கும் புகலிடத்தில் விழுந்த முதலாவது மரண அடி.... அத்துடன் தீவிரமாக எதிர்த்தோர் நடுநிலையாளராகவும், நடுநிலையாளர் கொலை முகாமிற்குள்ளும் வேறு வழியின்றிச் சேர்ந்து வாழ்கின்றனர் – கொலை வெற்றியளித்திருக்கின்றது.


புகலிடத்தில் இருந்து, இருக்கும் இருட்டு நிலையை மாற்றுவதற்கு எங்கிருந்தாவது ஓர் சிறு வெளிச்சம் கிடைக்காதா என இலங்கையில் ஓர் எதிர்பார்ப்பு இருந்தது. நூற்றுக்கு மேற்பட்ட சஞ்சிகைகளும் பிரசுரங்களும் இலக்கியத் தொகுப்புகளும் அதற்குரிய எதிர்பார்ப்பை அளித்திருந்தது. இப்போது எல்லாம் அணைந்துபோய் கும்மிருட்டில் இருக்கின்றது. இருட்டே வெளிச்சமாக ஆக்கப்பட்டிருக்கிறது.
– கொலை வெற்றியளித்திருக்கின்றது.

சபாலிங்கம் கொல்லப்பட்டபோது பிரபல பிரஞ்சுப் பத்திரிகையான "LE PARISIEN" "தேர்ந்த கொலையாளிகள் பயன்படுத்தும் கலிபர் 9 mm துப்பாக்கியினால் இவர் கொல்லப்பட்டார்" என்று குறிப்பிடும்போது, எமது பிரஞ்சு தமிழ்ப் பத்திரிகையான 'பாரீஸ் ஈழநாடு' "தமிழர் ஒருவர் சுடப்பட்டார்" என்று பதிவு செய்கிறது.

சபாலிங்கம் என்று ஒருவரே இருக்கவில்லையென்ற அருவருப்பான கெட்ட நோக்கத்தோடு காலம் வேகமாக நகர்கிறது.

**– சுகன், பிரான்ஸ். –**

# குறுக்கெழுத்துப் போட்டி-32



### இடமிருந்து வலம்

1. தொழிலாளர்களின் சர்வதேச ஒற்றுமைத் தினம்.
4. கவர்ச்சி.
8. 'வாயிடைப் புகை வர வாலி கண் வரும் தீயிடை தன் நெடுங் கூந்தல் தீகின்ற'வளாய் நின்று கணவன் போருக்குச் செல்வதைத் தடுத்த கம்பன் பாத்திரம்.
9. பின்பற்றத் தகுந்த முறையில் இருப்பவர்.
10. விழாக்கள் சிறப்பான ஏற்பாடுகளுடன் கூடியிருப்பது.
12. 'க்கு' சேர்த்தால் வாய் நீளும்; 'ப்பு' சேர்ந்தால் படகு செலுத்தலாம்.
13. நல்ல பாடல்கள் இது நுகரும் கனிகள் என்பர்.
14. களங்கம். (தலைகீழ்)
15. குற்றம் செய்தவர்கள் போய் --- கம்பிகளை எண்ண வேண்டியதுதான்.
16. ஊசி போன்ற இலைகளைக் கொண்ட மரம்; அடிக்கப் பயன்படுத்தும் பொருளுக்கும் இந்தப் பெயர்தான்.
18. நாயைக் கண்டால் இதைக் காணோம். (தலைகீழ்)
19. பொதுவான அம்சங்களின் அடிப்படையில் அமைந்த பிரிவு.
21. திருநெல்வேலிக்கு அல்வா, பருத்தித்துறைக்கு வடை என்றால், திருப்பதிக்கு இது.
23. மோப்பக் குழைவது அனிச்சம்; நோக்கக் குழைவது இது.
25. வேதங்களில் தத்துவ ஆராய்ச்சி நிறைந்த பகுதி.
28. வழிபடு.
29. மிகநல்லது. (குழம்பி)
32. ஒருவரது பேச்சு, பார்வை, செய்கை எல்லாவற்றிலும் இது இருந்தால் அவரை நமக்குப் பிடித்துவிடும்.
34. மனிதக் கழிவு, இதற்கெனக் கூடங்கள் உண்டு.
35. இந்தியாவில் நக்ஸல்பாரி இயக்கத்தின் பிதாமகர்.

### மேலிருந்து கீழ்

1. மேதை. சிலர் தங்களை இப்படி நினைத்துக் கொள்வதால் கேலியாகவும் சொல்வது.
2. வெளிப்படையாக வருவதற்கு முன் பேச்சுவார்த்தைகள் ரகசியமாக நடைபெறுவது.
3. மாமிசம் தவிர்த்து காய்கறிகளை உணவாகக் கொள்ளும் முறை. (தலைகீழ்)
4. போலீஸ் இலாகாவின் தமிழ்ப் பெயர். (குழம்பி)
5. எட்டயபுரம் அரசரிடம் உதவி கேட்டு பாரதி எழுதியது.
6. பற்களால் செய்வது. நம் காலப் பேச்சுவழக்கில் சிலர் பேசித் துன்புறுத்துவது.
7. பாம்புக்கு பல்லில் சிலருக்கு நாக்கில். (தலைகீழ்)
11. சுரங்கம் தோண்டி எடுத்து எரிபொருளாகப் பயன்படுத்துவது. (தலைகீழ்)
13. மாலை நேரத்துப் பூ.
17. தொழுநோய்.
20. பெரும்பாலும் போலீஸின் வேலை. இலக்கியத்தில் பெண்கள் கண்களினாலும் இதைச் செய்வார்கள்.
22. முகத்தில், இரண்டாகப் பிளந்திருந்து பற்களை மூடியிருக்கும் பகுதி. (தலைகீழ்)
24. ஆத்திரம் அறிவுக்கு ----. (தலைகீழ்)
26. ---- விழிகளிலே பரிவுடன் ஒரு விழியால் பார்த்தாலும் போதும் என்று முருக பக்தர்கள் பாடுகிறார்கள்.
27. இனப்பிரச்சினைக்கான தீர்வைக் கொண்டுவருவதில் அரசு இதைச் செய்வதால்தான் சந்தேகங்கள் ஏற்படுகின்றன. (தலைகீழ்)
30. பெரும்பாலும் ஒரு நாளுக்குள் வாடிவிடும் அழகு.
31. சண்டை மூட்டுவதற்கு இதைச் சீவி விடுதல்; மமதை ஏறும் இது முளைத்திருந்தால்; கொடிக்குத் தேவை.
32. மூச்சு நின்றுவிட்டால் இது. பேச்சுரிமை மறுக்கப்பட்டாலும் நிலை இதற்குச் சமம்தான்.
33. விவசாயம். கடைசியெழுத்தில்லை.

**விடைகளை மட்டும் தனியாக ஒரு தபாலட்டையில் எழுதி எதிர்வரும் 30ந் திகதிக்கு முன் அனுப்பி வையுங்கள்.**

**புதிய கண்ணோட்டம்**
**த.பெ.இல: 442**
**கொழும்பு**

### குறுக்கெழுத்துப் போட்டி-31 விடைகள்:

**இடமிருந்து வலம்:**

1. எடிபல
4. பிரியங்கா
7. ரயர்
8. லாவகம்
9. கோபம்
11. விளம்பரம்
12. ஆலயம்
15. சாம்பல்
17. கரும்பு
19. தபா(ல்)
20. சப்பாத்தி
22. கசக்கு
24. (ப)ந்து
25. சளி
26. (க)ராம்பு
27. காதம்பரி
29. கைத்தடி
30. மவுசு

**மேலிருந்து கீழ்:**

1. எல்லாவல
2. பரகசியம்
3. லயம்
5. ரிஷபம்
6. காந்தம்
9. கோளம்
10. திருப்பம்
13. ஆசாபாசம்
14. குப்பம்
16. பால்
17. கத்தும்
18. புரளி
19. தகராறு
21. சந்தடி
23. புக்கை
25. சரிவு
27. காத(ம்)
28. பசு

**சரியான விடை எழுதி ரூபா 100 பரிசாகப் பெறும் அதிர்ஷ்டசாலி:**

**வே. இரத்தினசிங்கம்,**
**உவர்மலை,**
**திருகோணமலை.**

**பாராட்டுப் பெறத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழு பேர்கள் வருமாறு:**

1. இ. ரவிதேவி,
   35, மில் வீதி, வவுனியா.
2. எஸ். விமலேஸ்வரன்,
   'டிலாசால் இல்லம்', மன்னார்.
3. பா. வினோதினி,
   70/1, கோவிந்தன் வீதி, மட்டக்களப்பு.
4. உருபரன்,
   33, 1ம் ஒழுங்கை, குருமண்காடு, வவுனியா.
5. எஸ். தாஃபீக்,
   இக்கிரிகொல்லேவ, அநுராதபுரம்.
6. ஆர். சி. சந்த்ரு,
   'காமலீன்', சின்னக்கடை, மன்னார்.
7. ரி. திஸ்ஸவீரசிங்கம்,
   தபாலகம், கல்முனை.

## வன்னி....

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கிராமசேவகரிடம் கையெழுத்து பெற்று, தமது சொந்தக் கிராமத்தை உறுதிசெய்து கொள்ள வேண்டும். பின்னர் அரச அதிபரிடம் கையெழுத்துப் பெற வேண்டும். பின்னர் மன்னார் பொலீஸ் அத்தியட்சகர் கையெழுத்திட வேண்டும்.

அதன் பின்னர் பொலீஸ் புலனாய்வுத் துறையினர் விசாரணையை மேற்கொள்வர். அவர்கள் உறுதிப்படுத்திய பின்னர் மன்னார் 'பாஸ்' காரியாலயத்திடம் இந்த 7 விண்ணப்பப்படிவங்களும் கையளிக்கப்படும்.

அதனைப் பரிசீலனை செய்து அக்காரியாலயத்திலுள்ள பொலீஸ் அதிகாரி பாஸ் வழங்குவார்; அல்லது வழங்காமல் விடுவார்.

மன்னாரிலிருந்து 11.30–12.00 மணியளவில் பஸ்வண்டி புறப்படும்.

பல்வேறு சோதனைச் சாவடிகளையும், சோதனைகளையும் தாண்டி பஸ் பூவரசங்குளத்தை 2.30 மணிக்கு வந்தடைகிறது. வவுனியாவினுள் செல்பவர்களுக்கான மன்னார் 'பாஸ்' பூவரசங்குளத்தில் பொலீசாரிடம் கையளிக்கப்பட வேண்டும்.

வவுனியாவிற்குத் தெற்கே பிற இடங்களுக்குச் செல்பவர்களுக்கு வவுனியா ரயில் நிலையத்திற்கருகாமையில் உள்ள சனசமூக நிலைய முகாமில் வைத்தே பாஸ் வழங்கப்படுகிறது.

மன்னாரிலிருந்து இரண்டு பஸ்களே புறப்படுகின்றன. இதேபோல் வவுனியாவிலிருந்தும் இரண்டு பஸ்கள் புறப்படுகின்றன. சராசரியாக 200 பேர் இருபக்கங்களிலிருந்தும் பிரயாணம் செய்கிறார்கள்.

முருங்கன்போன்ற பெரும் கிராமங்கள் யுத்தத்தின் கோரச் சுவடுகள் பதிந்து பாழடைந்து கிடக்கின்றன.

இதற்கிடையே மன்னார் பெருநிலப்பரப்பின் அரச கட்டுப்பாட்டிலுள்ள பகுதியினருக்கான உணவு, மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் இனிமேல் அரசு கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள மடுவில்தான் வந்து பெறவேண்டும் என்று மன்னார் இராணுவ இணைப்பதிகாரியினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் அரச அதிபர் குருஸ் அவர்கள் இதிலுள்ள சிக்கல்கள் சிரமங்கள் பற்றி கொழும்புக்கு அறிவித்துள்ளார். வெள்ளாங்குளம் 35 மைல் தூரத்திலிருக்கிறது. பெரிய மடு 8 மைல் தூரத்திலுள்ளது. இத்தகைய சூழ்நிலையில் மக்கள் உலர்உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களை மடு றோட்டில் வந்து பெறுவதென்பது நினைத்துப் பார்க்க முடியாத விடயம்.


அரசின் கட்டுப்பாட்டிலில்லாத பகுதிகளில் அடைமழை பெய்கிறது. இடம்பெயர்ந்து குடிசைகளில் வசிக்கும் மக்கள் சொல்லொணா அவலங்களைச் சந்திக்கிறார்கள் பலர் பாடசாலைகளில் அகதிகளாகத் தங்கியுள்ளார்கள்.

ஒருபுறம் யுத்த அச்சுறுத்தல், மறுபுறம் நாளாந்த பட்டினி அவலம், இயற்கையின் சீற்றம் இவற்றுக்கு மத்தியில் அந்த மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். சிலர் பார்த்துக் கொண்டிருக்கும்போதே இறந்து விடுகிறார்கள்.

மொத்தத்தில் வன்னி மனிதப் பேரவலத்தின் காட்சிக்கூடமாக மாறியுள்ளது. ●

"கடவுள் இல்லையென்று சொல்கிறீர்களே, அதற்கு மாற்று நாம் காட்ட வேண்டாமா?" என்று கேட்டதற்கு பெரியார்: "அட என்னய்யா, வாசல்ல புள்ள அசிங்கம் பண்ணி வச்சிருக்கு, அத அள்ளி தூரப் போடுன்னு சொன்னா, நீ அத எடுத்துட்டு அந்த எடத்துல எத வைக்கிறதுன்னு கேக்கிறியே...."

# விடுதலைப் புலியின் கனேடியக் கூத்து



கனடாவில் இயங்கும் சகல எல்.ரி.ரி.ஈ. இயக்க கிளைகளுக்கும், தீவிர ஆதரவாளர்க்கும் அதிகாரம் மிக்க பொறுப்பாளராக தலைவர் பிரபாகரனால் நியமிக்கப்பட்ட 'சுரேஷ் அண்ணா' என அழைக்கப்பட்ட தயாளன் அல்லது சுரேஷ் மாணிக்கவாசகம் என்ற நபரால் எல்.ரி.ரி.ஈ. இயக்கத்தினர்க்குப் பெரும் அவமதிப்பு நேர்ந்திருக்கிறது.

இவர் ரொறொன்ரோவில், ஒரு தீவிரவாதி என்ற பெயரில் கைதான போது, தான் புலிகளின் பலவந்த போர்ப் பயிற்சியைத் தவிர்ப்பதற்காகவே கனடாவில் அரசில் தஞ்சம் கோரி சிறீலங்காவை விட்டு வந்ததாகக் கூறியிருக்கிறார்.

சுரேஷ் என்னும் இந்த பிரமச்சாரியப் புலி பல பெண்களுடன் பாலியல் தொடர்பு கொண்டிருந்தார் என்ற விவகாரம் புலிகளைத் தூக்கிப்பிடிப்போர்க்கு மேலும் பேரதிர்ச்சியைக் கொடுத்திருக்கிறது.

கனடாவில் உள்ள சகல புலி அமைப்புகளின் முக்கிய பிரதிநிதி எனக் கணிக்கப்பட்ட சுரேஷ் அண்ணாவின் பாலியல் விவகாரம் அண்மையில் அம்பலமானவுடன், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் உத்தரவின் பேரில் சுரேஷ் இயக்கத்திலிருந்து விலக்கப்பட்டார் என அறிவிக்கப்பட்டது. இச் செய்தி புலி வீரர் மத்தியிலும் ஆதரவாளர் மத்தியிலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இவரின் நூற்றுக்கணக்கான ஆதரவாளர்கள் இவர் காலால் இட்ட பணியைத் தலையால் சுமந்து செயற்படுவதற்குச் சித்தமாக இருந்தனர் எனக் கூறப்படுகிறது.

சுரேஷ் அண்ணா ரொறொன்ரோவில் சர்வாதிகாரம் படைத்த பிரதிநிதியாக இருந்தபோது அவரைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்கேற்பட்டது.

இவரை முதன் முதலில் 17.06.95ல் ரொறொன்ரோவில் நடந்த மிகப்பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று 20000 க்கு மேற்பட்ட ஆதரவாளர்களால் மேற்கொள்ளப்பட்ட காலத்தில் சந்திக்க நேர்ந்தது. இவர் ஒரு மதிப்பிற்குரிய தலைவராகவே கணிக்கப்பட்டார்.

நானும் அந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் கலந்துகொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது. அப்போது ஒரு முக்கியஸ்தரால் நான் சுரேஷிற்கு அறிமுகஞ்செய்து வைக்கப்பட்ட போது, சுரேஷ் வேறு யாருமல்ல, மட்டக்களப்பு பன்ரிங்ஸ் ஒழுங்கையைச் சேர்ந்த தயாளன் மாணிக்கவாசகம் எனத் தெரியவந்தது.

தயாளனின் அப்பா ஒரு புகையிரத நிலைய அதிபர், அம்மா ஒரு ஆசிரியை, சகோதரனான குணாளன் தற்போது லண்டனில் வசித்து வருபவர் என்ற விபரங்களை அறிந்துகொண்டேன். குணாளன் எனது நண்பனுங்கூட.

எனது வேண்டுகோளை ஏற்று பொறுப்பாளர் சுரேஷ் அண்ணாவுடன் நான் உரையாடும் சந்தர்ப்பமும் ஏற்படுத்தப்பட்டது. அதன்படி அன்று காலை 10 மணிக்கு 64, ஈற்றன் அவனியூ என்ற கிரேக்கர் வாழும் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட, கனடாவில் புலிகளின் தலைமையகமாக விளங்கிய அந்த வீட்டிற்குச் சென்று, மதியம் 12 வரை அவருக்காக காத்திருக்கப் பணிக்கப்பட்டேன்.

12.20 போல் வாசஸ்தலமாகவும் செயலகமாகவும் விளங்கிய அந்த வீட்டின் மேல்மாடி அறையிலிருந்து கீழிறங்கி வந்த சுரேஷ் 'தாமதத்துக்கு மன்னிக்கவும்' என என்னிடம் மன்னிப்புக் கோரி, மதிய போசனத்திற்கு என்னை அழைத்தார். மூன்று அழகிய இளம் பெண்கள் எங்களுக்கு உணவு பரிமாறினர். அவர்கள் புலித்தொண்டர்கள் என அறிமுகஞ் செய்து வைக்கப்பட்டனர். பொறுப்பாளர் ஆணையிடும் பணிகளைத் துரிதமாகச் செயற்படுத்தினர்.

இதையடுத்து, இராப்போசனத்துக்கும் கனடா தமிழர் ஒன்றியத்தின் உப தலைவர் திரு இராஜரட்ணம் வீட்டில் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன.

நாம் தொடர்ந்து உரையாடிக் கொண்டிருக்கையில், ராஜரட்ணம் புலிகளின் தூணாகச் செயற்படுகிறார் என அறிந்துகொண்டேன். அவரைஏற்கனவே நான்அறிவேன் ஆதலால், அவர் கடந்த காலத்தில் புலிகளுக்கெதிராகச் செயற்பட்டமை பற்றிப் பேச ஆரம்பித்ததும், அவருக்கும் சுரேஷிற்கும் என்னில் மனஸ்தாபம் ஏற்பட்டிருக்க வேண்டும். உடனடியாக இராப்போசன ஒழுங்கை ரத்துச் செய்ததுடன், இப்படியான நேரடி உரையாடல்களுக்கு திலகரிடமிருந்து அனுமதி பெற்றே பேசவேண்டும் எனவும் எனக்கு அறிவுறுத்தப்பட்டது.

திரு. இராஜரட்ணம் மட்டக்களப்பில் ப.நோ.கூ.சங்கத்தின் முன்னாள் ஊழல் முகாமையாளராகவும் இருந்தவர். முன்னர் புலி இளைஞர்களைப் பொலீஸில் காட்டிக் கொடுத்தவர். ஆனால் தற்போது புலிகளின் ஆதரவாளர் என நான் அறிந்து கொண்டேன்.

சுரேஷ் என்னுடன் கலகலப்பாகப் பேசிக் கொண்டிருந்தபோது, தான் மட்டக்களப்பில் 1955ல் பிறந்ததாகவும், தமது மாணவப் பருவத்தில் தமிழரசுக் கட்சியிலும் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியிலும் மிக ஈடுபாடு கொண்டவர் எனவும், கவிஞர் காசி ஆனந்தனைப் பின்பற்றுபவர் எனவும், மட்டக்களப்பில் ஒரு ரியூசன் சென்ரர் நடத்தியவர் எனவும் குறிப்பிட்டார்.

மேலும் அவர், பிறகு புலிகள் இயக்கத்தில் சேர்ந்து அயராது உழைத்ததையும், எல்.ரி.ரி.ஈ. உறுப்பினர்களுக்குள் 1980இல் பிளவு ஏற்பட்டபோது, இவர் புளொட் தலைவர் உமாமகேஸ்வரனிடம் புலிகளின் ஆயுதங்களை ஒப்படைத்து டானியல் என்ற பெயருடன் புளொட் அமைப்பில் இருந்து ஒத்துழைத்ததையும், பின் 1983ல் புளொட்டை விட்டு ஆயுதங்களுடன் வெளியேறி புலித் தலைவர் பிரபாகரனிடம் சரண் அடைந்ததையும் சொன்னார்.

இவர் செப்.83ல் மட்டக்களப்பு சிறையுடைப்பு விவகாரத்தில் ஈடுபட்டதாகத் தேடப்பட்டபோது, சிறீலங்காவை விட்டு கனடாவுக்குச் சென்றார். அங்கு அரசாங்கத்தால் ஒக்ரோபர் 95ல் இவர் ஒரு பயங்கரவாதி-பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டவர் என்ற குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டார் எனப் பத்திரிகை மூலம் அறிந்தேன்.

இந்த வழக்கை கனடா கோர்ட்டில் பலத்த பாதுகாப்புடன் விசாரணைக்கெடுத்தபோது, இதற்கெதிராக எல்.ரி.ரி.ஈ. உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் நீதிமன்றத்துக்கு முன்னால் பெரும் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

கனேடிய குடிவரவு அமைச்சராலும், சட்ட ஆலோசகராலும் கைச்சாத்திடப்பட்ட கட்டளைக்கிணங்க விசாரணைக்கு எடுக்கப்பட்ட இந்த வழக்கில், சுரேஷ் எல்.ரி.ரி.ஈ. யினரோடு எதுவித தொடர்பு மற்றவர் என 99.9 வீதம் ஆதரவு தெரிவித்து புகழ்பெற்ற சட்டத்தரணிகள் வாதாடினர். சுரேஷுக்காக வாதாடிய வழக்கறிஞர், எல்.ரி.ரி.ஈ. ஒரு விடுதலை முன்னணி, அது பயங்கரவாத இயக்கமல்ல, அப்படி எல்.ரி.ரி.ஈ. ஒரு பயங்கரவாத இயக்கமாக இருந்தாலும், சுரேஷ் அதன் உறுப்பினராக இல்லாத காரணத்தினால் அவர் ஒரு எல்.ரி.ரி.ஈ. பயங்கரவாதியாக இருக்கமுடியாது என வாதிட்டனர்.

ஆனால் எல்லா தமிழ் மக்களும் சுரேஷ் எல்.ரி.ரி.ஈ இயக்கத்தின் கனேடியத் தலைவர் என அறிந்திருந்தும் இப்படி ஒரு அப்பட்டமான பொய் கூறப்பட்டது.

பல்வேறு தரப்பினால் கூறப்பட்ட சாட்சியங்களும் சுரேஷ் ஒரு எல்.ரி.ரி.ஈ. இயக்க அனுதாபி மட்டுமே, இயக்கத்தில் ஒருவித ஈடுபாடுமில்லையெனக் கூறின.

இலங்கை தூதராலயத்தின் தலையீட்டின் பின் சுரேஷ் புலிகள் இயக்கத்தின் மூத்த உறுப்பினரில் ஒருவர் என்றும், சிறீலங்காவிற்கு வெளியே அவர் கைது செய்யப்பட வேண்டியவர் எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

கனடாத் தமிழரின் புலிக் கதாநாயகனாகக் கணிக்கப்பட்ட சுரேஷுக்கு எதிராகச் செயற்பட்ட 'மஞ்சரி' என்னும் தமிழ்வாரப் பத்திரிகையில் பத்திரிகையாளர் டி.பி.எஸ். ஜெயராஜ், கனேடிய அரசாங்கம் எல்.ரி.ரி.ஈ. ஐ ஒரு பயங்கரவாத இயக்கமென வர்ணித்துள்ளது எனப் பிரசுரித்தார். இதை அடுத்து மஞ்சரிக்கெதிராக பாரிய ஆர்ப்பாட்டம் நடத்தி மஞ்சரி பிரசுரிப்பை நிறுத்தச்செய்தனர் புலி ஆதரவாளர்கள்.

சில வாரங்களின் முன் நான் கனடாவுக்குத் திரும்பிப் போயிருந்தபோது, அங்கு 1996ல் சுரேஷைப் பற்றி இருந்த கொந்தளிப்பு நிலை இருக்கவில்லை. அதைப்பற்றி எவரும் சட்டை செய்ததாக இல்லை. அவருக்காகப் பாடுபட்டவர்கள் ஒருவரும் தென்படவில்லை. சுரேஷைப் பற்றி விசாரித்தபோது, அவர்கள் சொன்ன விடயம் என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. எல்.ரி.ரி.ஈ.யினர் ஒழுக்கத்தைப் பற்றி ஒருவர் வைத்திருந்த நல்லெண்ணம் சுக்குநூறாகியது.

சுரேஷ் ஒரு பயங்கரவாதியாகவும், கனடாவுக்குள் நுழைய முன்னர் பாரிசில் போதை வஸ்து கடத்துபவராயும், பிரான்சில் அவரைக் கைது செய்வதற்குக் கட்டளை பிறப்பித்ததாகவும், ஜேர்மனியில் ஒரு கொலைச் சம்பவத்துடன் சம்பந்தப் பட்டிருந்ததாகவும் சித்தரிக்கப்பட்டார்.

இது தவிர, சென்னையிலும் சிங்கப்பூரிலுமிருந்தும் பொருட்கள் கடத்துபவராகச் செயற்பட்டார் எனவும் கூறப்பட்டது.

சுரேஷை எல்.ரி.ரி.ஈ. போராளியாக்கிய குழுத் தலைவரே, தாம் சுரேஷுக்குப் போர்ப்பயிற்சியளித்ததாகவும் சாட்சியமளித்தார். இதைவிட எல்.ரி.ரி.ஈ. இயக்கத்தினருக்கு நிதி திரட்டும் விபரங்களடங்கிய தஸ்தாவேஜுக்கள் சகிதம் சுரேஷ் புலிகளுக்காக நிதி திரட்டினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டார்.

சுரேஷுக்கு எதிராகச் செயற்பட்ட ஒருசிலர் எல்.ரி.ரி.ஈ. இயக்கத்தினுள் இருக்கத்தான் செய்தனர் என்ற விஷயமும் தெளிவாயிற்று. கனேடிய ரி.வி.யில் ஒளிபரப்பப்பட்ட நிகழ்ச்சிகளும், சுரேஷ் மேல் வைத்திருந்த நம்பிக்கையை தமிழ் மக்கள் இழந்துவிட்டனர் என்பதைச் சித்தரித்தன.

1990ல் சுரேஷ் கனடாவுக்குள் நுழைந்தபோது அவர் தம்மை ஒரு அகதியாகப் பதிந்து, எல்.ரி.ரி.ஈ. தன்னைப் பலவந்தமாக போர்ப் பயிற்சிக்கு நிர்ப்பந்தித்ததாகவும், அதன் காரணமாக சிறீலங்காவை விட்டு வெளியேறியதாகவும் கூறினாராம். இந்த விவகாரம் வெளிவந்ததும் தமிழர் அதிர்ச்சி அடைந்தனர்.

சுவிற்சலாந்து எல்.ரி.ரி.ஈ. கிளைகளுக்குப் பொறுப்பாளரான முரளீதரனும் இதேவிதமாகக் கைது செய்யப்பட்டபோதும், அவர் தான் ஒரு எல்.ரி.ரி.ஈ. உறுப்பினரல்ல என மறுக்கவில்லை. எல்.ரி.ரி.ஈ. உறுப்பினர்கள், தாம் கைதாக நேர்ந்ததால் தம்மைக் காட்டிக் கொடுக்காது சைனைட் உட்கொண்டு தம் உயிரையே மாய்த்து விடுவர். மீறி கைதாக நேர்ந்தாலும் அவர்கள் துணிகரமாக, தாம் எல்.ரி.ரி.ஈ. உறுப்பினர்; எல்.ரி.ரி.ஈ. இயக்கம் ஒரு பயங்கரவாத இயக்கமல்ல என அடித்துக் கூறுவர் என்பதாகவே கதைகள் நிலவி வந்தன.

சுரேஷ், தைரியமாக உண்மையை வெளியிடாது, ஒரு கோழையாக உண்மையை மறைத்துவிட்டார் எனவும், இதிலும் பார்க்க அவர் சயனைட் பாவித்து உயிரை மாய்த்திருந்தால் அதுவே அவர் எல்.ரி.ரி.ஈ.யினருக்குச் செய்யும் பெருங் கைங்கரியமாக இருந்திருக்கும் எனத் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு இருந்தது. இப்படிப்பட்ட ஒரு நம்பிக்கைத் துரோகிக்கு இவ்வளவு பெருந்தொகைப் பணத்தை ஏன் இறைத்தோம் எனவும் சிந்தித்தார்கள்.

ஒவ்வொருநாளும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் பொறுப்பாளர் சுரேஷ் அண்ணா தொலைபேசி பாவிப்பதற்கு எல்.ரி.ரி.ஈ. இயக்கத்தினால் அனுமதிக்கப்பட்டிருந்த காலத்தில், ஒலிப்பதிவு செய்யப்பட்ட ஒரு கசற் (ஒலி நாடா) அகப்பட்டது. அதி உயர் பதவியில் உள்ள எல்.ரி.ரி.ஈ. பெண் உறுப்பினருடன் உரையாடிய பகுதி, அந்தப் பெண்ணுக்கும் சுரேஷுக்குமிடையே நெருக்கமான உறவு நிலவியிருந்ததைத் தெளிவாக்கியது.

சுரேஷ் கைதானதை அடுத்து, உலகத் தமிழ் இயக்கத்தின் தலைவரான இன்பநாயகம் - (சுரேஷின் உதவியாளராக இருந்தவர்; யாழ் பலைகலைக்கழகத்தில் அரசியல் துறை விரிவுரையாளராகக் கடமையாற்றியவர்; தன்னலம், சூது, வஞ்சகம்நிறைந்தவர் என நண்பர்களால் கணிக்கப்பட்டவர்.) இவரின் கையில் இந்த ஒலிப்பதிவு நாடா அகப்பட்டதும், அவர் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நான்குபேரைக் கொண்ட குழுவை ஏற்படுத்தி சுரேஷின் பாலியல் விவகாரத்தை விசாரணைக்குட்படுத்தினார்.

பல எல்.ரி.ரி.ஈ. பெண் ஊழியர்களும் தொண்டர்களும் விசாரிக்கப்பட்டனர். இக்குழு பல்வேறு விஷயங்களை விசாரணைமூலம் கண்டுபிடித்தது.

சுரேஷ் 7 பெண்களுடனும், 3 மணம்முடித்த பெண்களுடனும், ஒரு விதவையுடனும் பாலியல் தொடர்பு கொண்டிருந்ததாகவும், இவர்கள் யாவரும் கனடாவில் எல்.ரி.ரி.ஈ இயக்கத்தோடு தொடர்புடையவர்கள் என்று விடயம் அம்பலமாகியது. இதைப்பற்றியஅறிக்கை தலைவர் பிரபாகரனுக்கு சமர்ப்பித்ததும், சுரேஷை இயக்கத்திலிருந்து விலக்கும்படியும் சுரேஷ் வழக்கு சம்பந்தமாக எல்.ரி.ரி.ஈ. ஒரு பயங்கரவாத இயக்கமா அல்லது விடுதலை இயக்கமா என்பதை நிர்ணயிப்பதற்கு நிதியுதவி நல்குவதாகவும் பிரபாகரன் அறிவித்திருந்தார்.

தற்போது கனடாப் புலிகளுக்கு இன்பநாயகம் பொறுப்பாளராக இயங்கிவருகிறார். இவருக்கு ரஞ்சன், சந்துரு, கண்ணன், குணம் அடங்கிய நால்வர் குழு உதவியாக இருக்கிறார்கள் என தெரியவருகிறது. இதே குழுதான் சுரேஷின் பாலியல் சம்பந்தமான ஒலிப்பதிவு நாடாவைப் பற்றிய விசாரணையில் சுரேஷைக் குற்றவாளியாக நிறுத்தியது. இந்த ஒலிநாடா எப்படித் தொலைபேசி உரையாடல்களைப் பதிவு செய்தது என்பதும், எப்படி இன்பநாயகத்தின் கைக்கு எட்டியது என்பதும் புரியாத புதிராகவே இருக்கிறது.

நன்றி: 'சண்டே லீடர்'




இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை கருத்தரங்குத் தொடரில், 04.05.1997 அன்று மட்டக்களப்பில் நடைபெற்ற கருத்தரங்கில் வாசுதேவ நாணயக்கார, சுரேஷ் பிரேமச்சந்திரன், எஸ். மனோரஞ்சன்



இந்த ஆண்டு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மேதினக் கூட்டம் மட்டுநகரில் நடைபெற்றது. காலை 9 மணிக்கு மட்டக்களப்பு காந்தி சிலையிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட பேரணியை பொலீஸார் கலைத்தனர். ஆனாலும் ஏற்கனவே திட்டமிட்டபடி பல்வேறு இடங்களிலிருந்தும் புறப்பட்ட ஊர்வலத்தினர் வில்லியம் ஓல்ற் மண்டபத்தில் வந்து கூடினர். 10 மணிக்கு கே.ஜோதிநாதன் ரவி தலைமையில் மேதினக் கூட்டம் நடைபெற்றது. மாநகர சுகாதார தொழிலாளர் சங்கம், வண்டித் தொழிலாளர் சிக்கன கூட்டுத் தாபனம், தெங்கு பனம்பொருள் அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம், நாட்டாமை கூலி தொழிலாளர் சங்கம், மீனவர் கூட்டுறவு சங்கம், ஆட்டோ ஓட்டுனர் சங்கம், தனியார் வாகன போக்குவரத்து சங்கம் மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். சார்பிலும் பேச்சாளர் பேசினர். மட்டு மாநகர முதல்வர் செழியன் பேரின்பநாயகமும் உரையாற்றினார்.

# வன்முறை நோய்க்குள் சிக்கிக் கொண்டு விட்ட சமூகம்

.....வன்முறையின் பிரச்சினையானது அதன் இயல்பான சுபாவத்திலேயே குடிகொண்டுள்ளதுடன், அது நாசகார வடிவங்களோடு தான் தவிர்க்க முடியாமல் வளர்ச்சியடைந்து கொண்டும் செல்கிறது. வன்முறையானது அதைப் பிரயோகிப்பவனின் மனித நேயத்தை அழித்து அவனைக் காட்டுமிராண்டியுமாக்குகிறது. ஒருமுறை அவனது கரங்கள் குருதியில் தோய்ந்து போகுமானால் வழமையான தயக்கங்களும் உள்ளுணர்வில் செயற்படும் மனத்தடைகளும் இப்போது நடந்து விட்டதுபோல சிதறடிக்கப்பட்டு விடுகின்றன. இந்தக் கட்டுப்பாடின்மையும் கட்டுப்பாட்டையே பூரணமாக இழந்துவிட்ட தன்மையும் அதிகாரம் குறித்த உணர்ச்சிக்கு அதாவது முழுமையான அதிகாரம் என்னும் நிலைமைக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கிறது.

மாறுபட்ட கருத்துக்களைச் சகித்துக்கொள்ள இயலாமை, தனது சொந்தக் கருத்துக்களில் வெறித்தனமான நம்பிக்கை வைப்பது, தலைமைக்கு குருட்டுத்தனமாக அடிபணிந்து நடப்பது, பிழையே நடக்க முடியாது என்ற உறுதியான நம்பிக்கை மற்றும் வலி, வேதனை, உயிர் போன்றவற்றைப் பற்றிக் கிஞ்சித்தும் அக்கறை காட்டாமை என்பனவெல்லாம் கால ஓட்டத்தில் வெளிப்பட ஆரம்பித்து விட்டது. பல இராணுவ அதிகாரிகள், போராட்டக் குழுக்களின் தலைவர்கள், ஜனநாயக விரோத அரசின் பிரதிநிதிகள் போன்றோரிடம் பேசும்போது, அவர்கள் மத்தியில் முழுமையான அதிகாரம் பற்றிய தப்பான உணர்வுகள் நிலவுவதை நன்குணர முடிகிறது. மற்றவர்கள் உயிர்வாழ அனுமதிக்கப்பட்டிருப்பதற்கு தங்களுக்கு அவர்கள் நன்றிக்கடன்பட்டவர்களாக இருத்தல் வேண்டும் என்றும், மற்றவர்களது உயிரின் மீது தங்களக்கு சட்டபூர்வமான அதிகாரம் உள்ளது என்றும்அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அவர்களது பேச்சு காட்டிக் கொடுத்துவிடுகிறது. அவர்களிடம் உள்ளுறைந்து போயிருக்கும் பாதுகாப்பற்ற உணர்ச்சியைக் கண்டுபிடித்துக்கொள்ள ஆழமான ஆராய்ச்சி எதுவும் அவசியமில்லை.

இதைவிட வன்முறையும் இரத்தம் சிந்துதலும் உணர்ச்சிக் கொந்தளிப்பையும், பகைமையையும், வெறுப்பையும், அச்சத்தையும், சந்தேகத்தையும், பிறர் மீதான அவநம்பிக்கை போன்ற மனநோயையும் கொண்ட சூழ்நிலையை ஏற்படுத்தி, தெளிவான ஒன்றைப் பற்றிச் சிந்திப்பது என்பதையே சாத்தியமில்லாது செய்துவிட்டது. இது தொடர்ச்சியாக தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட கலவரங்களிலிருந்து தெளிவாகத் தெரிந்தது. தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்த நாகரீகமான – அனுசரித்துப் போகும் கொள்கையைப் கடைப்பிடித்த சிங்களத் தலைவர்களும் இத்தகு வன்முறைகளின்போது ஆற்றிய உரைகளில் பொறுப்பற்ற விதத்தில் தமது சகிப்புத்தன்மையின்மையை வெளிப்படுத்தியிருந்தனர்.


மனித நடவடிக்கைகளில் இன்னொரு முரண்பாடான விஷயம் என்னவெனில் பாதிக்கப்பட்டவனை விட ஆக்கிரமிப்பாளன் தான்தான் அதிகமான தீங்குக்கு ஆளானவன் என்ற மனப்போக்கைக்கொண்டிருப்பவனாக இருப்பதாகும்.

கொலைச்செயலானது பழிவேண்டி அலையும் எதிரிகள் கூட்டத்தையே அதிகப்படியாக உருவாக்கக்கூடியதாகும். தாங்களே கட்டவிழ்த்துவிட்ட வன்முறையால் அச்சம், எவரிலும் நம்பிக்கையின்மை என்ற மனநோய் உலகில் சிக்கிக்கொண்டு விட்ட ஒருவன் யாரையும் நம்பத் தயாராக இல்லாமலிருப்பதுடன் எப்போதும் சந்தேகத்துடனேயே வாழ நேர்ந்துவிடுகிறது. கொடூரங்கள் பல புரிந்த பெரும் யுத்த அதிகாரிகளை ஆராய்ந்து வெளியான முடிவுகளின்படி திடுதிடுக்கென பயங்கரக்கனவுகளை எதிர்கொள்ளுதல், அவநம்பிக்கை, நடத்தையில் பிரச்சினைகள், போதைவஸ்து பாவனைகள் போன்ற மன இறுக்க நோய்க் குறிகளின் அதிகரிப்பு இவர்களிடம் காணப்படுவது தெரியவந்தது. இத்தோடு வன்முறையின் உணர்வெழுச்சிக்கும் மயிர்கூச்செறியும் செயலுக்குமே அடிமைப்பட்டுப் போகும் அபாயமும் இருப்பதால் தான் இவை மனதளவில் நிலைத்த காயங்களை ஏற்படுத்தி, மன இறுக்கத்தை உண்டாக்கி, பிறகு கொல்லக்கூடிய நோயாகவும் அமைந்து விடுகிறது. கடுமையான சண்டைகள் மற்றும் உண்மையான அபாயகரமான சூழ்நிலைகளில் உயிர்த்துடிப்பாக உணரும் இவர்கள் அம்மாதிரியான சூழ்நிலைகள் இல்லாதபோது சோர்வடைந்து விரக்தியுடன் காணப்படுவார்கள். அதிகமானோர் மக்கள் கூட்டங்களிலும் பொது இடங்களிலும் திடுதிப்பாகவும் நம்பிக்கையின்மை போன்ற நோயுடனும் காணப்படுவதுடன் அதிசீக்கிரத்தில் எரிச்சலுறுபவர்களாகவும் விவாதத் தொனியில் பேசவும் முற்படுவர். தங்களிடம் சுயவெறுப்பையும் சுயவிரோதத்தையும் வளர்த்துக் கொள்வதுடன் அத்தகைய சுயவெறுப்பு நிலையில் தங்களை உயர்வாகக் காட்டிக் கொள்ளவும் அவற்றை வெளிப்படையாக மாற்றவர்கள் முன் வெளிப்படுத்திக் கொள்ளவும் முனைவர். இதன் மூலம் வன்முறை மற்றும் எதிர்வன்முறைக்கான ஓர் இடைவிடாத ஓட்டத்தை இவர்கள் விரும்பி நிற்பர். குழந்தைகள் மத்தியில், இவர்களின் இத்தகைய வன்முறையின் அனுபவங்கள் அவர்களின் ஆளுமை வளர்ச்சியில் நிரந்தரமான விகாரங்களையும் உருக்குலைவையும் ஏற்படுத்தி விடுகிறது. நாம்டா (NAMDA) அறிக்கை ஒன்று குறிப்பிடுவது போல்,

*“அவர்களின் நண்பர்கள் மற்றும் அவரைச் சூழ இருப்போரின் மத்தியில் கூட நம்பிக்கையை வழங்க இவர்கள் இயலாதவர்களாய் இருப்பதால் இதனைத் தொடர்ந்து அவர்களின் குழந்தைகளுக்குக்கூட நம்பிக்கையூட்ட முடியாதவர்களாகி விடுகிறார்கள். கசப்பையும் ஆத்திரத்தையும் உள்ளுக்குள்ளேயே எரியவிட்டுக் கொண்டிருப்பதுடன் பழிவாங்கும் தகிப்பும் அவர்களை அழுத்திக்கொண்டு விடுகிறது. தங்களின் சுய உணர்ச்சிகளைக் கூடக் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள முடியாமல் போவதால் இவர்களின் உள்ளுணர்வு சமூக விரோத வழியில் செயற்படவும் ஏதுவாக இருக்கிறது.”*

சீரழிவான எமது நிலைமையை, ஆயுதங்களைக் காவித் திரியும் குழந்தைகளின் காட்சியைவிட வேறு எதுவுமே இவ்வளவு தெளிவாகச் சித்தரித்து காட்ட மாட்டாது. ஆனால் இதற்கான காரணங்களை சிலர் வேறெங்கோ தேடுகின்றனர்...

....சமூக மட்டத்தில் அஹிம்சையானது பொதுமக்களின் பங்குபற்றலோடு செம்மையாக நடைமுறைப் படுத்தப் பட்டிருக்குமானால் அது மக்களை, இளைஞரையும் முதியோரையும் ஆண்களையும் பெண்களையும் ஒன்றுபடுத்தி, ஐக்கியமுறச் செய்து அவர்களின் நோக்கத்திற்கு ஒரு அர்த்தத்தையும் அவர்களது நடவடிக்கைகளுக்கு ஒரு பெருமிதத்தையும் வழங்கியிருக்கும்.




நடைமுறைச் சாத்தியத்தைப் பொறுத்தவரையில், இரக்கமற்ற வன்முறைத்தன்மையுடைய எதிரியை அஹிம்சை மூலம் வெற்றி கொள்வதென்பது முடியாதென்றே விவாதிக்கின்றனர். ஆனால் இது உண்மையானதாகத் தோன்றவில்லை. நோர்வேயை நாஜிகள் கைப்பற்றியிருந்தபோது அங்கு ஒரு பொம்மை அரசைத் திணிக்க முயன்ற குயிஸ்லிங்கின் முயற்சிகளை அங்குள்ள ஆசிரியர்கள் அஹிம்சைப் போராட்டத்தின் மூலமே எதிர்த்தார்கள். நோர்வே, டென்மார்க், ஒல்லாந்து போன்ற நாடுகளில் நடந்த அஹிம்சைப் போராட்டங்கள், ஏனைய நாஜி ஊடுருவல் நாடுகளில் நடந்த வன்முறைப் போராட்டங்களைவிட அதிக குழப்பத்தை ஏற்படுத்தியதை ஹிட்லரின் ஜெனரல்கள் கண்டதாக இராணுவ யுக்தியியல் ஆராய்ச்சியாளரான லிட்டல் ஹர்ட் (LIDDEL HART) கூறியிருக்கிறார்.

அடக்குமுறை குறித்து அச்சமோ ஆச்சரியமோ கொள்ளத் தேவையில்லை. அஹிம்சை நடவடிக்கைகள் தனது கொள்கைக்கோ அல்லது ஆட்சிக்கோ ஒரு அச்சுறுத்தலாக வரும் அபாயமிருப்பதாக எதிரியொருவன் ஏற்றுக்கொள்வதன் விளைவாகத்தான் இந்த அடக்குமுறைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அஹிம்சாவாதிகள் சில சந்தர்ப்பங்களில் இவற்றின் விலையாகத் தண்டனைகளை அனுபவிக்கவும் விருப்போடு முன்வரவேண்டியுள்ளது.

இரண்டு தரப்பினரும் வன்முறையை உபயோகிக்கும்போது அதிலும் அபாயங்கள் உள்ளன. ஐந்து ஆண்டுகால வன்முறைப் போராட்டத்தின் [illegible] சமூ[illegible] மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்பது கண்கூடான உண்மையா[illegible] முன்னெடுத்திருந்தால் நமக்குத் திறந்து விடப்பட்டிருக்கக்கூடிய வழிமுறைகளை [illegible] முன்னால் இப்போ[illegible]

அரசு [illegible] விழ்த்துவிட்ட பெரும்பா[illegible] முறைகள் அதிகரித்துச் சென்ற எதிர்வன்முறைகளின் விளைவாகும். ஆனால் இது ஒரு[illegible] அரசு மேற்கொண்ட அட்டூழியங்களுக்கு நியாயங் கற்பிக்கமாட்டாது. ஆனால் நாம் வன்முறை–எதிர்வன்முறை என்ற நச்சுச்சுழல் வட்டத்தின் விளைவுகளைக் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

இவ்வளவு அழிவுகள் துயரங்களுக்குப் பின்னரும் நாம் மனிதவிடுதலை என்ற இலட்சியத்தினை நெருங்கிக்கொள்ளக்கூட முடியவில்லை. இன்று நாம் பெற்றுக் கொண்டுள்ள அரசியல் சலுகைகள் 1957லும் 1966லும் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் எழுத்தில் பெற்றுக் கொண்டவற்றை விடக் கணிசமாக உயர்ந்ததுதானா என்பதை நாம் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

இந்த யுத்தத்தின்போது அனுபவித்ததைவிட சிறிதளவு துன்பங்களைச் சந்திக்கத் தயாராக இருந்து மக்கள் தாமே விரும்பி அஹிம்சை வழிமுறையை ஏற்றுக்கொண்டிருந்திருந்தால் விடுதலைக்கான விலை இன்னும் குறைவானதாகவே இருந்திருக்கும். இதெல்லாவற்றையும் விட முக்கியமாக ஒற்றுமைப்பட்ட பலம்வாய்ந்த சமூகமாக நாம் மாறியிருப்போம். வன்முறையின் தவிர்க்க முடியாத விளைவுகளையே நாம் இன்று எதிர்கொள்ள வேண்டியவர்களாக உள்ளோம். பல்லாயிரக்கணக்கான மக்கள் அழிந்து போன பின்னரும் தன் தலைவிதியை நிர்ணயிக்கமாட்டாத சீர்குலைந்த சமூகமாகவே நாம் உள்ளோம். எதிர்காலத் தலைமுறையினரையும் இந்த நிதர்சனமான வன்முறை வழிபாட்டிற்குப் பலியாக்கிவிட்டோம்.....

– மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் (யாழ்ப்பாணம்) வெளியிட்ட ‘முறிந்த பனை’ நூலிலிருந்து....

# உளறு வாயன்



மிக அதிகச் சந்தடி காதைச் செவிடு படுத்துகிறது. மிக அதிக தூரமோ மிக அதிகச் சமீபமோ நம் பார்வையை மறைக்கிறது. மிக அதிகமான அல்லது மிகச் சுருக்கமான பேச்சு, அறிவை வளராது தடுக்கிறது. மிக அதிக உண்மை நம்மைத் திகைக்க வைக்கிறது.

– பாஸ்கல்

[illegible] பட்டாலும் நாய் காலைத் தூக்கிக் கொண்டு ஓடுமாப் போலை, இங்கையுள்ள பிரச்சினைபற்றி எந்தப் பக்கத்தால யோசிச்சுக் கொண்டு போனாலும், எங்கட சனத்தின்ர ஒற்றுமை பற்றின கவலையிலதான் வந்து நிக்குது. பொதுவாய் பிரச்சினை தீருறதுக்கு ஒண்டுபடுறது எண்டில்லாமல், இதிலயும் அவரவர் லாபங்களை யோசிச்சுத்தான் குழம்புகினம் எண்டு தெரியுது. அரசாங்க மந்திரிமாரோடை பேசுற தமிழ்க்கட்சித் தலைவர்கள், மற்றத் தமிழ்க்கட்சியள் எல்லாம்தான் உங்களுக்கெதிராய் நிக்கினம் எண்டு நூல் முடியிறதிலதான் முதல் கவனம் செலுத்துவின மாம்! மந்திரிமாரும் அதை ஒளிச்சு மறைச்சு வைக்கிறேல்லை, "நீங்கள் இப்பிடிச் சொல்லுறியள்.... உங்களைப்பற்றி அவர் அப்பிடிச் சொன்னாரே...." எண்டு போட்டுடைப்பினமாம்! கிட்டடியில ஒரு அமைச்சரிடம் வேறை அலுவல்களுக்காகச் சந்திக்கப் போன தமிழ்க்கட்சித் தலைவர் ஒருவர், முக்கால்வாசி நேரம் இன்னொரு தமிழ்க்கட்சித் தலைவரைப் பற்றித்தான் அள்ளிவைச்சுக் கொண்டிருந்தாராம். "அவர் யுத்தத்தைக் கண்டிச்சு அரசாங்கத்துக்கு எதிராய் அறிக்கையள் விடுறவர்; நான் மட்டும்தான் புலியளை எதிர்க்கிற ஒரேஒரு தமிழ்த் தலைவர்" எண்டாராம். இதை, பிறகு போன தலைவரிட்டை அமைச்சர் சொன்னாராம். "யுத்தத்தை நிப்பாட்டச் சொல்லுறது, அரசாங்கத்தை எதிர்க்கிறதுக்காக இல்லை, முழு நாட்டையும் காப்பாற்றத்தான்...." எண்டு சொல்லிப் போனாராம் அவர். இடையில கூத்து எப்பிடிப் போச்சுதெண்டால், அடுத்த கிழமையே புலி எதிர்ப்புத் தலைவர் பேப்பர்களுக்கு அறிக்கை விடுறார், யுத்தத்தை நிப்பாட்ட வேணுமெண்டு. அவரவற்றை ஏற்ற இறக்கங்களுக்கேற்ற மாதிரித்தான் கொள்கைப் பிரகடனங்களும், வீரவசனங்களும் சுருதி ஏறியும் இறங்கியும் வருகுது.

பின்னை என்ன? தன்னை முதலில யோசிச்சுப் பிறகு மற்றதுகளை யோசிக்கிறதாலை ஒற்றுமை வரவே வராது. இது மற்றவளத்தில, தமிழ்க்கட்சியள் இயக்கங்கள் எல்லாம் அழிஞ்சு முடிஞ்சால்தான் சங்கதி.

இதுவரைக்கும் தமிழ் மக்களுக்காகப் போராடிக் கொண்டிருந்தவர்கள் புலிகள் மட்டுமே எண்டதில வலுகிளியராய் இருந்தவை, இப்ப வேறையும் தமிழ்க் கட்சியள் இருக்கெண்டு கண்டுபிடிச்சிருக்கினம். தமிழ் அமைப்புக்கள் எல்லாம் ஒண்டுபட்டால்தான் பிரச்சினை தீருமாம் – இப்ப சொல்லுகினம்.... ஓம், ஓம்... உங்களுக்கிது நம்புற மாதிரிக் கிடக்கே?

முந்தியே ஒருக்கா சங்கரப்பிள்ளையோடை கதைக்கேக்கை சொன்னனான்: இஞ்சை கொஞ்சப் பேர் இருக்கினம். புலியள் சமாதானப் பேச்சுத் திருவிழா எண்டு வெளிக்கிட்டாடினால், உடனை இவை மூசி மூசிக் கத்துவினம்: "மற்றத் தமிழ்க் கட்சியளைக் கணக்கில

இந்தத் தமிழ் 'செற்'.

"சரி விடும், ஊனா வாவன்னா.... கனத்துக்குக் கனம் விளங்கும் கருவாட்டுத் தலைதான் வேறையேதோ விலங்குக்குத் தெரியும்...." எண்டு அப்ப சொன்னவர் சங்கரப்பிள்ளையர்.

சரி இதுகள் உண்மையாய் பிரச்சினை தீரவேணுமெண்டு விரும்புதுகளோ எண்டு அறிய பெரிசொண்டிட்ட வாயைக் குடுத்தன். அந்தாளின்ர கதைக்குக் கோவந்தான் வந்திருக்க வேணும். ஆனால் எனக்குப் பரிதாபமாய்த்தான் கிடந்துது. என்னதான் எண்ணையைத் தேய்ச்சுக்கொண்டு விழுந்து புரண்டாலும், ஒட்டுற மண்தானே ஒட்டும். உள்ளை ஊறிப்போயிருக்கிற நஞ்சும் சிலதுகளை யோசிக்க விடாது கண்டியளோ! எத்தினை

## உளறுவாயன் தர்ம நியாயங்கள் யாருக்கு இங்கே புரியப் போகிறது?


தமிழ்ச் சனத்தின்ரை ஒற்றுமைப்பாடு சாத்தியமெண்டு சொல்லுற வையின்ர கனவைத்தான் உசார்ப்படுத்திவிடும்....

இதுதான் எனக்குத் தெரிஞ்சது.

ஒவ்வொருத்தருக்கும் அவரவர் கையில மடியில காய்ச்சல் வரேக்கைதான் ஒற்றுமை ஞானோதயம் உண்டாகிறது. கொழும்பில ஒரு 'செற்'றுக்கு வந்திருக்கிற திடீர் ஞானோதயம், தமிழ்க்குணத்தைச் சொல்லச் சரியான ஒரு எடுத்து இந்தப் புனிதப் பேச்சைக் குழப்பக் கூடாது... புலியளோடை மட்டும் பேச வேணும்" என்பினம். புலியள் பேச்சை முடிச்சுத் தீர்த்தமாடி உள்ள போயிட்டின மெண்டால், அடுத்தது என்னத்தைக் கதைக்கிற தெண்டு தெரியாமல் இவை முழுசுவினம். புலி அடிவாங்கிச் சிக்குப்பட்டுப் போய் சேடம் இழுக்கிற நிலை வந்தால், 'பெயில்' எடுத்துவிட ஒற்றுமைக் கொடியைத் தூக்கிக் கொண்டு ஓடிவரும் பேரை அழிச்சாவது ஆண்ட பரம்பரை திரும்பவும் ஒருக்கா நாடு பிடிச்சு ஆள வேணுமெண்டதுதான் கனவெண்டு அலைஞ்சால்..... உதுகளை நான் அலம்பித் திருத்தேலுமே? விட்டால், சாதாரண சனம் முழுத்தையும் அழிச்சுத்தான் முடிப்பினம்.

ஏதோ! எல்லாரும் கொஞ்சம் கவனமாய்ப் பாத்துக்கொள்ள வேணும்.....

நான் வாறன். பிறகு சந்திக்கிறன். வரட்டே?



## "இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை" கருத்தரங்கு –6

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக நடாத்திவரும் தொடர் கருத்தரங்கில் ஆறாவது கருத்தரங்கு, தெகிவளை எஸ்.டி.ஜெயசிங்க மண்டபத்தில் 11.05.1997 அன்று நடைபெற்றது. தினகரன் துணை ஆசிரியர் திரு. ரி. பாஸ்கரன் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் கலாநிதி. ஜெகான் பெரேரா (இயக்குனர், தொடர்பு சாதனத் துறை, இலங்கை தேசிய சமாதான சபை), கலாநிதி. பாக்கியசோதி சரவணமுத்து (நிறைவேற்று இயக்குனர், மாற்றுக் கொள்கைக்கான நிறுவனம்), திரு. சுரேஷ் பிரேமச்சந்திரன் (செயலாளர் நாயகம், ஈ.பி.ஆர்.எல்.எஃப்.) ஆகியோர் விரிவுரைகள் நிகழ்த்தினர்.

"இலங்கையில் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம்" என்ற தலைப்பில் உரைநிகழ்த்திய கலாநிதி ஜெகான் பெரேரா தனது பேச்சில்: "இலங்கை இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கு முப்பதுக்கும் மேற்பட்ட உலகநாடுகள் முன்வந்துள்ளன. ஆனால் எமது அயல்நாடான இந்தியாவின் ஆதரவு ஒத்துழைப்பின்றி எந்தவொரு சமாதானத் தீர்வும் சாத்தியப்படாது என்பதே எனது எண்ணமாகும்...." என்று குறிப்பிட்டார்.

"மூன்றாம் தரப்பு மத்தியஸ்தமும் சிங்கள அரசியற் சக்திகளுக்குள் காணப்படும் தயக்கமும்" என்ற தலைப்பில் உரை நிகழ்த்திய கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து பேசுகையில்: "புலிகளை பயங்கரவாதிகள் என்று குற்றம் சாட்டியவர்களோ அல்லது அரசு மனித உரிமைகளை மீறுகிறது என்று கூறுபவர்களோ மத்தியஸ்தம் பேசமுடியாது. எனவே மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஒரு குழுவாக இருக்க வேண்டும். அதில் இந்தியாவும் முக்கிய இடம்பெற வேண்டும் என்பதே எனது கருத்தாகும். சமாதானப் பேச்சுவார்த்தை, யுத்தநிறுத்தம் போன்ற எதுவித முன்நிபந்தனைகளும் இன்றி முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும். தீர்வில், தமிழ்மக்கள் இந்த நாட்டின் ஒரு தேசிய இனம் என்பதை ஏற்றுக் கொள்வதுடன், அவர்களுக்கு வேண்டிய அதிகாரங்கள் அனைத்தும் அளிக்கப்பட வேண்டும்...." என்று அவர் வலியுறுத்தினார்.

"வட-கிழக்கில் ஜனநாயகத்தை மீட்டெடுத்தல்" என்ற தலைப்பில் பேசிய சுரேஷ் பிரேமச்சந்திரன் தனது உரையில்: "வட-கிழக்கில் வாழும் மக்கள் அனுபவித்துவரும் இன்னல்களைத் தீர்க்கும் முயற்சிகளை அரசு துரிதப்படுத்த வேண்டும். அங்கே சட்டம் ஒழுங்குகள் கவனிக்கப்படுவதில்லை. ஒருசிலரைத் திருப்திப்படுத்துவதற்காக அரசு சில பாரதூரமான விடயங்களில்கூட அசிரத்தை காட்டி வருவது மக்கள் மத்தியில் விரக்தியையும் வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது. தமிழ்கட்சிகள், அமைப்புகள் அனைத்தும் மக்கள் நலன் கருதி தமது பழைய போக்குகளை மாற்றி தம்மைத்தாமே திருத்திக் கொள்ள வேண்டும்..." என்றார்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி EPRLF

22, வெளிவட்ட வீதி, வவுனியா சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்களால் இரத்தனப்பிட்டிய CRC அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.